# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 15 வியாழக்கிழமை (31-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:209



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்


## * நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு!

## * நாடாளுமன்றின் ஆயுள் 5 வருடங்களாகக் குறைப்பு!!

# ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் நிபந்தனையின்றி நேரடியாகப் பேச்சு!

## தேர்தல் விஞ்ஞாபனம் சனியன்று வெளியாகும்

கொழும்பு,ஓகஸ்ட்31

**எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் -**

**★ அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனை ஏதுமின்றி, நேரடியாகப் பேச்சு நடத்தும்.**

**★ நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை ஒழித்துக் கட்டப்படும்.**

**★ நாடாளுமன்றத்தின் ஆட்சிச் காலம் ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்படும்.**

**- இவ்வாறு ஐ.தே.கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.**

"உங்களின் எதிர்காலம்" என்ற தலைப்பிலான இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும் விசேட மாநாடு ஒன்றில் வைத்து வெளியிடப்படவிருக்கின்றது.

இனப்பிரச்சினை குறித்து சகல கட்சிகளுடனும் பேச்சு நடத்தி, ஓர் இணக்கமான முடிவைக் கண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகரசபை கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்.மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி ஒழுங்கையிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இடம்பெறும்.

யாழ்.மாநகரசபையின் பிரதி மேயர் என்.ரவிராஜ் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

## 2படையினர் காயம்

கொழும்பு,ஓக.31

மீசாலையில் படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் இரண்டு படையினர் காயமடைந்தனர் என்று விசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## திருமலையில்

## தமிழ் கட்சிகளை ஒரே அணியில் போட்டியிடக் கோரி உண்ணாவிரதம்

திருகோணமலை,ஓக.31

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் ஒரே அணியில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழர் விழிப்புணர்வு ஒன்றியத்தைச் சேர்ந்த எஸ். யேசுதாசன் என்பவர் நேற்றுமுதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

திருகோணமலை வள்ளுவர் கோட்டத்துக்கு முன்னால் இந்த உண்ணாவிரதம் இடம்பெற்று வருகிறது.

தமிழ் கட்சிகள் மற்றும் சுயேச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுரேஷ் குழுவின் முக்கியஸ்தர்கள் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்

## நாளை வேட்பு மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம்,ஓக.31

ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின் சுரேஷ் பிரேமச்சந்திரன் குழுவின் சார்பில் யாழ்.மாவட்டத் தேர்தலில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் வில்சன் மற்றும் மத்திய குழு உறுப்பினர் சோமு ஆகியோர் உட்பட சில பிரமுகர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஷ் அணியினர் யாழ்.மாவட்டத்திலும், வன்னி மாவட்டத்திலும் போட்டியிடும் தமது வேட்பாளர்களின் பட்டியலை அனேகமாக நாளை தாக்கல் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் -

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தேர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். உட்பட சகல மாவட்டங்களிலும் ஐக்கியதேசியக் கட்சி போட்டியிடும்

கொழும்பு,ஓக.31

யாழ்ப்பாண மாவட்டம் உட்பட சகல மாவட்டங்களிலும் ஐ.தே.கட்சி தனது சின்னத்தில் போட்டியிடும் என்று ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க உதயனுக்குத் தெரிவித்தார்.

"வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணி தற்சமயம் இடம்பெற்று வருகின்றது. ஓரிரு தினங்களில் பட்டியல் வெளியிடப்படும்" என்றும் கூறினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்கள் தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது. அந்தப்பட்டியல் இன்று பிற்பகலில் வெளியிடப்படலாம்" என்றும் ரணில் மேலும் சொன்னார்.

தமது கட்சி எவருடனும் கூட்டுச் சேராது தனித்தே போட்டியிடவிருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்களில் பலர் இம் முறை தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவிக்காததால் அவர்களது இடத்துக்கு புதியவர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர் என்றும் அவர்மேலும் சொன்னார். (உ-க-3)

## யாழ்ப்பாண மாவட்டத்தில் பொ.ஐ.மு. போட்டியிடாது

யாழ்ப்பாணம்,ஓக.31

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி யாழ்.மாவட்டத்தில் போட்டியிடமாட்டாது என்று பெரும்பாலும் முடிவாகிவிட்டதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவுப் போக்குடைய சில அணிகள் யாழ்.மாவட்டத் தேர்தல் களத்தல் குதித்துள்ளதால் அவற்றுக்கு எதிராக வாக்குகள் பிரிவதைத் தவிர்க்கும் நோக்குடனேயே பொதுமக்கள் ஐக்கிய முன்னணி போட்டியிடாமல் ஒதுங்குவதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## தமிழ்க்கட்சிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதை அனுமதிக்க வேண்டாம்!

## கூட்டணியினர் படைத்தரப்பிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.31

ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள தமிழ்க்கட்சிகள் தேர்தல் காலங்களில் ஆயுதங்களை வைத்திருக்கவோ அல்லது ஆயுதங்களுடன் நடமாடவோ அனுமதிக்கக்கூடாது.

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி, யாழ்.மாநகரசபை பிரதி மேயர் என்.ரவிராஜ் ஆகியோர் பலாலியிலுள்ள யாழ். பிராந்தியக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று பலாலி படைத்தளத்துக்கு விஜயம் செய்த இவர்கள் படைத்தலைமையக அதிகாரிகளைச்சந்தித்து கலந்துரையாடல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிற்றி ஒவ் றிங்கோ பயணிகளுக்கு பயணச்சீட்டு வழங்கும் பணி இன்று முதல் யாழ்.செயலகத்திடம்!

யாழ்ப்பாணம்,ஓக.31

'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பலுக்கு பயணச்சீட்டு வழங்கும் முகவரின் பணியை யாழ்.செயலகம் இன்று முதல் ஏற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்.செயலகத்தில் உள்ள வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையின் அலுவலகப் பிரிவு ஊடாக இப்பணி நடைபெறும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை காலமும் எம்.எஸ். எஸ்.டிரேடிங் கம்பனி பயணச் சீட்டு முகவர் பணியை மேற்கொண்டு, சீட்டுக்களை விநியோகித்து வந்தது.

இனிமேல் யாழ்.செயலக அதிகாரிகள் பயணிகளுக்கு பயண அனுமதிப்பத்திரம் வழங்கும் போதே பயணச் சீட்டுக்களையும் விநியோகிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் -

இதுவரை காலமும் பயணச் சீட்டுக்களை வழங்கி வந்த தனியார் முகவர் நிறுவனம், தம் கைவசம் உள்ள பயணச்சீட்டுக்களை - அவை முடியும் வரை - பயணிகளுக்கு விநியோகிக்கக்கூடும் என்று மற்றொரு தகவல் தெரிவித்தது.

## அரசு - முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறவு நீடிக்குமா என்பது குறித்து இன்று முடிவு!

கொழும்பு,ஓக.31

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் இடையிலான உறவு நீடிக்குமா என்பது பெரும்பாலும் இன்று மாலைக்குள் முடிவாகிவிடும் என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப் அனேகமாக இன்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்திக்கின்றார்.

'நாம் எழுப்பியுள்ள பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி இன்று மாலைக்குள் சாதகமான - தீர்க்கமான - பதிலைத் தரவேண்டும். தீர்வு இல்லையேல் நாளை ஜும்மாத் தொழுகையின் பின்னர் ஒரே நேரத்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அஷ்ரப் ஒரு சர்வாதிகாரி என்கிறார் அமைச்சர் பௌசி!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் செயலாளர்களை ராஜினாமாச் செய்யுமாறு மக்காவில் இருந்து உத்தரவிட்டது அஷ்ரப்பின் சர்வாதிகாரப் போக்கையே எடுத்துக் காட்டுவதாக அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையை அஷ்ரப் கொழும்பு திரும்பிய பிறகு ஜனநாயக முறையில் செய்திருக்கலாம். அதைவிடுத்து ராஜினாமாக் கடிதங்களை மக்காவுக்கு "பக்ஸ்" செய்யுமாறு உத்தரவிட்டிருந்ததும் -

அமைச்சர் பதவியில் இருந்து என்னை நீக்குமாறு கேட்டதும் -

அவரது சர்வாதிகாரப் போக்கையே காட்டுகிறது. அவர் சிறிசேன குரேயுடன் கூட்டுச் சேரவுள்ளார் - என்றும் அமைச்சர் பௌசி "திவயின" பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். (ஐ-6-20-186)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.31

அரச மற்றும் மாகாண அரச சேவையில் உள்ள களஞ்சியக் காப்பாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள பொண்ட் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தொழிற்சங்க விடயங்கள், அரச சம்பள ஆணைக்குழுவின் எதிர்பார்ப்புகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-க)


**பாவனையாளர்களுக்கு**

**லாலாவின் புதிய செய்தி!**

இதோ!

தரமான முறையில் தயாரிக்கப்பட்ட லாலா நீலசோப்; லாலா சன்சயின் சோப் புதுப்பொலிவுடன் பல வர்ண லேபிளில் புதிய தோற்றத்தில் உங்களுக்காக உங்கள் கைகளில்.......

நீங்கள் கொடுக்கும் பெறுமதி லாலாவின் தரம் என்றும் நிரந்தரம் என்பதை உங்களுக்கு உணர்த்தும் அதன் அதிசயிக்கும் வெண்மை. அதனை நீங்கள் ஒரு முறை பாவித்தால் உங்களை லாலாவின் பாவனையாளராக்கும்.

மாணவ மணிகளுக்காக அப்பியாசக் கொப்பிகள் இலவசமாகக் காத்திருக்கின்றன. 15 லாலாவின் மேலுறைகளை வழங்கி 01 அப்பியாசக் கொப்பியை இலவசமாகத் தட்டிச் செல்லுங்கள்.

எமது தயாரிப்புக்களை பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய எமது முகவர்கள்.

☛ கு.செல்வரத்தினம் (ஆமி)
நிக்ஷன் பல்பொருள் வாணிபம் - அச்சுவேலி.
☛ ஜீவா பல்பொருள் வாணிபம்
பருத்தித்துறை வீதி - கரவெட்டி - நெல்லியடி
☛ கீசோ பல்பொருள் வாணிபம்
நெல்லியடி மத்தி.
☛ நாதன் பல் பொருள் வாணிபம்
புத்தூர் ஆவரங்கால்.
☛ நாகபூசணி பல்பொருள் வாணிபம்
ஆவரங்கால் மத்தி.

லாலா நீல சோப் | லாலா சன்சயின் சோப்

**லாலா சோப் தொழிற்சாலை**
அச்சுவேலி
(C/12753)


### வாழ்த்துகின்றேன்

இன்று (31–08–2000) வியாழக்கிழமை தனது 19ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
கூடவில், புலோலி தெற்கு,
செல்வன் **பெனடிக்ற் குணநாதன்** அவர்களை
நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

இ. திருபாகரசூரியன்
பத்திரிகையாளர்
புலோலி.
(77850)


**நாகம்ஸ்**
சுன்னாகம்
அஜித் – ஷாலினி
நடிப்பில்
**அமர்க்களம்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
(77865)


## வாழ்த்துகின்றோம்


30~08~2000 அன்று யாழ்.மாவட்ட நீதிவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்து
யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற
இல.80, யாழ்.வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
**உயர்திரு. பொன்னுத்துரை இராஜேந்திரன் (ரஜி) J.P**
அவர்களை
உளமார வாழ்த்துகின்றோம்.

– நண்பர்கள்.
(77868)


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், கௌசல்யா, அப்பாஸ், ஹீரா, ராதாரவி
மற்றும் பலரின் நடிப்பில்
**பூவேலி**
காட்சிகள்: 10.30, 2.00
(புதிய நேரம்)
(C/12325)


## திருமண அழைப்பு

நேரம் : காலை 7.13 மணிமுதல் முற்பகல் 9 மணிவரை.
காலம் : 01 – 09 – 2000 (நாளை) வெள்ளிக்கிழமை
இடம் : தாவகலட்டிலேன், ஆத்தியடி, பருத்தித்துறை.



**மணமகன்**
திருநிறை செல்வன்
பொ. சிவானந்தராசா
(ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி)

**மணமகள்**
திருநிறை செல்வி
ஜெயஸ்ரீ
(லிகிதர், பிரதேசசெயலகம், பளை)

அன்புடன் அழைக்கின்றோம்
திரு. திருமதி பொன்னையா (பெற்றோர்) திரு. திருமதி கனகரத்தினம்
(77581)

களஞ்சியக் காப்பாளர்களுக்கான

## அவசர கலந்துரையாடல்

அரச, மாகாண அரச சேவையிலுள்ள சகல களஞ்சியக் காப்பாளர்களுக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடாகியுள்ளது.

இடம் :- BOND கல்வி நிலையம், ஸ்ரான்லி வீதி
(ஆரியகுளம் சந்தி அருகில்)

காலம் :- 02.09.2000 சனிக்கிழமை காலை 10.30 (SLST)

குறிப்பு :- தொழிற்சங்க விடயங்கள், அரசாங்கத்தின் சம்பள ஆணைக்குழுவின் எதிர்பார்ப்புக்கள் ஆகியன தொடர்பாகத் தீர்மானிக்கப்படும்.

- ஒருங்கிணைப்பாளர்
(77587)

# சேவை நயப்பு வாழ்த்து

## 2000-08-31இலிருந்து ஓய்வு பெறும்

யா/சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவியும், புகழ் பூத்த ஆசிரியையுமாகிய

**திருமதி வே. அரசரெத்தினம்** (B.A. DIP. IN EDU., P.G.D. in Hin. Cul.) அவர்கள்

### கல்வி

ஆரம்பக்கல்வி:- யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்.
உயர்கல்வி:- யா/சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.
பட்டக்கல்வி:- இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை.
பட்டப்பின் படிப்பு:- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



### சேவை

1. யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்
07-09-1966 - 01-06-1971
2. யா/சேர். வை.து.ம.ம.வி ஆசிரியராக
02-06-1971 - 02-01-1993
3. பகுதித் தலைவராக
03-01-1993 - 31-08-2000

### வாழ்த்து

அன்பும் கனிவும் அறிவும் சேர்த்து
இன்பமுடன் கல்வி எமக்கீந்த
மங்கலம் பொங்கிட மாண்பும்
நுண்மதியும் கவித்துவமும் நிறைந்த
எம்மரிய ஆசிரிய நங்கையே!
நடராஜ சமேத சிவகாமி
அருள் பெற்று நீடு வாழி! வாழி!!

சைவமும் தமிழும் சாற்றிடும் பக்தியும்
நன்னெறி நடத்தையும் நயம்பட உரையும்
உம்மரிய பண்பாய்க் கொண்டு
உயரிய சேவை செய்தீர்!
ஆலய பூசை நாளும்
ஆர்வமாய்ச் செய்து நின்றீர்!
இன்பமாய் நீவிர் நாளும்
இல்லறம் சிறக்க வாழ
இறைதாள் ஏத்திநின்றோம்
என்றுமே நலமாய் வாழ்க! வாழ்க!!

**பழையமாணவர் சங்கம்**
யா/சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி ம.ம.வி., வேலணை.

(77852)

# யூகோஸ்லாவியாவில் விமானத் தாக்குதல்:

# கிளின்ரன் உட்பட 14 தலைவர்கள் மீது

# விரைவில் யுத்தக் குற்றவழக்கு தாக்கல்!

## அரசாங்கச் சட்டத்தரணி பெல்கிரேட்டில் அறிவிப்பு!!

பெல்கிரேட்,ஓகஸ்ட்31

**தமது நாட்டின் மீது விமானத் தாக்குதல் நடத்தியதற்காக அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் உட்பட 14 மேல்நாட்டுத் தலைவர்களுக்கு எதிராக யுத்தக் குற்றங்களுக்கான நீதிமன்றத்தில் விரைவில் வழக்குத் தாக்கல் செய்ய உள்ளதாக யூகோஸ்லாவிய அரசசட்டத்தரணி தெரிவித்துள்ளார்.**

'நேட்டோ' அமைப்பு நடத்திய விமானத் தாக்குதல்களினால் யூகோஸ்லாவியாவின் இறைமையை மீறும் வகையில் நடந்து கொண்டதாகவும் நாட்டின் அதிபரைக் கொல்ல முயற்சித்ததாகவும் வழக்கில் குற்றஞ்சுமத்தப்படும் என்று கூறிய அரசசட்டத்தரணி அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன்,பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர், மற்றும் பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளின் அதிபர்கள் உட்பட "நேட்டோ" வில் அங்கம் வகிக்கும் 14நாடுகளின் தலைவர்கள் மீதும் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படும் என்றும் தெரிவித்தார். குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் ஆதாரங்கள் தமது தரப்பில் உள்ளதாகவும்,

குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிகளுக்கு 15ஆண்டுகள் முதல் 20ஆண்டுகள்வரை சிறைத் தண்டனை வழங்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

1998 ஆம் ஆண்டு யூகோஸ்லாவியாவில் அல்பேனியர்கள் மீது செர்பியர்கள் நடத்திய தாக்குதல்களை தடுக்கும் நடவடிக்கை என்று கூறி, தலைநகர் பெல்கிரட் பகுதியில் நேட்டோ நாடுகள் 78 நாள்கள் விமானத் தாக்குதல்கள் நடத்தியதும், அதில் 800பேர் வரை இறந்ததும் தெரிந்தவையே. (ஒ)



பீல் கிளின்ரன்

## ராஜீவின் மகள் பிரியங்காவுக்கு ஆண் குழந்தை

புதுடில்லி,ஓக.31

மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகளான பிரியங்கா வதேராவுக்கு நேற்று முன்தினம் டில்லி கங்காரம் மருத்துவமனையில் ஆண்குழந்தை பிறந்துள்ளது.

குழந்தை பிறக்க வேண்டிய தினத்திற்கு 15 நாள்கள் முன்னதாக மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பிறந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

பிரியங்காவுக்கு இது முதலாவது பிரசவம் ஆகும். (ஒ-8)

## உணவுக்காக வெட்டியபோது சுறாவின் வயிற்றில் மனிதத்தலை!

சிட்னி,ஓக.31

ஆஸ்திரேலியாவில் உணவுக்காக வெட்டப்பட்ட சுறாமீனின் வயிற்றில் மனிதத்தலை ஒன்று இருக்கக் காணப்பட்டது.

'டவுன்வில்' கடல் பிரதேசத்தில் இயந்திரப் படகில் சென்ற மீனவர்களால் பிடிக்கப்பட்ட ஐந்தரை அடி நீளமும் சுமார் 44 கிலோகிராம் எடையும் உள்ள "கோட்" இனச் சுறாமீனின் வயிற்றிலேயே மனிதத்தலை இருந்தது.

மனித உடலின் மற்ற எந்தப் பாகமும் சுறாவின் வயிற்றில் இல்லாததால் துண்டிக்கப்பட்ட தலையையே சுறா விழுங்கியிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது.

இந்த மனிதத்தலை கடந்த வாரம் கடலுக்குச் சென்றபோது காணாமல்போன 39 வயதான மீனவர் மைக்கேல் எட்வேட் என்பவருடையதாக இருக்கலாமென்று நம்பப்படுவதால் பொலிஸார் அந்தக் கோணத்தில் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

தலைப்பகுதி அடையாளம் கண்டுபிடிக்க முடியாதவாறு சிதைந்து உள்ளதால் தமது பணி சிரமமாக உள்ளதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-8)

## லண்டனில் லஞ்சம் வழங்க முயற்சி; இலங்கையர் இருவருக்குத் தண்டனை!

### 'எமது நாட்டில் லஞ்சம் வழக்கம்' என்றனராம்

லண்டன்,ஓக.31

பிரிட்டனில் வசிக்கும், இரண்டு இலங்கைத்தமிழர்கள் லஞ்சம் கொடுக்க முயற்சித்ததற்காக தண்டனை பெற்றனர்.

நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்ட இருவரும் தமது நாட்டில் லஞ்சம் கொடுப்பது பெரிய விஷயமல்ல என்று தெரிவித்தனராம்.

இது குறித்து கூறப்படுவதாவது:

லண்டனில் வசிக்கும் இலங்கைத்தமிழர்களான 42 வயதுடைய மகாலிங்கம் விவேகசந்திரன் மற்றும் 35 வயதுடைய பிரிதிவிராஜ் சிவலிங்கம் ஆகிய இருவரும் வாகனச்சாரதி அனுமதிப் பத்திரங்கள் பெறுவதற்காக அதற்கான அலுவலருக்கு லஞ்சம் வழங்க முயற்சித்தனராம். அதனை ஏற்க மறுத்த அலுவலர் இது குறித்து பொலீஸில் முறைப்பாடு செய்தார். லண்டன் பொலீஸார் இலங்கையர் இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தினார்.

நீதிமன்றத்தில் தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட இருவரும் "எமது நாட்டில் இது பெரிய விஷயமல்ல" என்று தெரிவித்தனர்.

இவர்களுக்காக வாதாடிய சட்டத்தரணி லஞ்சம் கொடுப்பது இலங்கையில் வழக்கம் என்றும், அதனாலேயே அந்தப் பழக்கத்தை இங்கும் இவர்கள் செய்ததாகவும் தெரிவித்தார்.

இவற்றை அடுத்து, இலங்கைத் தமிழர்கள் இருவரையும் 80 மணித் தியாலங்கள் பொதுச் சேவைகளில் ஈடுபடவேண்டும் எனவும், 118 ஸ்டேலிங் பவுண்கள் அபராதமாகக்கட்ட வேண்டும் எனவும் நீதிபதி தீர்ப்பளித்தார். (ஒ-6)

## முன்னேறிய நாடுகளின் வளர்ச்சிக்கு தாய்மொழிக் கல்வியே காரணம்

### குன்றக்குடி அடிகளார் அறிவுரை

வளர்ச்சியடைந்த நாடுகள் முழுவதும் தாய்மொழிக் கல்வி மூலமே சிறப்படைந்துள்ளன என்று தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தெரிவித்துள்ளார்.

வளரும் குழந்தைகளுக்குத் தாய்மொழியில் கல்வி கற்பிப்பது வளர்ச்சிக்கு உதவும் என்று அறிவுறுத்திய அவர் தமிழ்நாட்டில் தாய்மொழிக் கல்விக்கான அரசு ஆணையை நீதிமன்றத் தடையால் செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பது குறித்து விசனம் தெரிவித்துள்ளார்.

எந்தநாட்டில் அறிவியல் தொழில் நுட்பம் பாமர மக்கள் வீட்டுக் கதவைத் தட்டுகின்றதோ, அந்த நாடே உயரும் என்றும் -

அதற்குத் தாய்மொழிக் கல்வியே துணைபுரிய முடியும் என்றும் - குன்றக்குடி அடிகளார் கூறினார். (ஒ-8)



ஜப்பானின் 'மியாகிஜிமா' தீவில் உள்ள 'ஒயாமா' எரிமலை இதுவரை இல்லாத அளவில் தீக்குழம்பைக் கக்கத் தொடங்கியுள்ளது. இதனை அடுத்து அந்தத் தீவில் வசித்த 1,400 பேர் வேறு தீவுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். கடந்த சில வாரங்களாக அவ்வப்போது தீக்குழம்பைக் கக்கிய எரிமலை, தற்போது பெருமளவில் தீக்குழம்பை வெளியேற்றுகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை தீக்குழம்பைக் கக்கும் முன்னர் வான்வெளியில் சுமார் 29 ஆயிரம் அடி உயரத்துக்கு சாம்பல் மற்றும் புகையை எரிமலை வெளித்தள்ளுவதைப் படத்தில் காணலாம்.

## ஆயிரமாயிரம் ஆண்டுகள் தமிழீழத்தை இளைஞர்களின் தியாகம் வாழவைக்கும்!

### பழ.நெடுமாறன் பெருமிதம்!!

தமிழீழத்தில் இளைய தலைமுறையினர் செய்யும் தியாகம் ஆயிரமாயிரம் ஆண்டுகள் அந்த நாட்டை வாழவைக்கும்.

இவ்வாறு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் சென்னையில் நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

மேலும் தனது உரையில் -

அண்டை நாட்டிலே - தமிழீழத்திலே - வாழ்கின்ற இளைஞர்களும் யுவதிகளும் வாழ்வின் வசந்த காலத்தில், தமது இன்னுயிரை தாய் மண்ணிற்காக அர்ப்பணிப்பதுதான் உண்மையான தொண்டாக இருக்க முடியும் என்று களத்திலே உயிரை அழித்துக் கொண்டிருக்கும் தியாக வேள்வி அங்கே நடக்கின்றது. அவர்களின் தியாகம் அந்த நாட்டை வாழவைக்கும்.



பழ.நெடுமாறன்

தமிழ் நாட்டில் தமிழர்கள் வலிமையுடன் இருந்தால் தான் உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களைப் போக்கிடப் போராட முடியும்.

இவ்வாறு பழ.நெடுமாறன் தெரிவித்தார். (ஒ-8)

### மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கும் வகையில்

## இந்திய அரசமைப்புச்சட்டத்தை மாற்ற பஞ்சாப் முதல்வர் பாதல் கோரிக்கை

ஹரியானா,ஓக.31

மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கும் வகையில் இந்திய அரசமைப்புச் சட்டம் மாற்றப்பட வேண்டும் என்று பஞ்சாபில் ஆளும் சிரோன்மணி அகாலிதள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இக்கட்சியின் தலைவரும், பஞ்சாப் முதல்வருமான பிரகாஷ்சிங் பாதல் அரசமைப்புச்சட்ட மறுபரிசீலனைக் குழுத்தலைவர் நீதிபதி வெங்கடாசலய்யாவைச் சந்தித்து இது தொடர்பான கோரிக்கையை முன்வைத்தார்.

பாதுகாப்பு, வெளிநாட்டுவிவகாரம், பண அச்சடிப்பு, பொதுத் தொலைத்தொடர்பு ஆகியது றைகளின் அதிகாரங்களை மத்திய அரசு வைத்துக்கொண்டு, பிற அதிகாரங்கள் அனைத்தையும் மாநில அரசிடம் ஒப்படைக்கும் வகையிலும்,

மதம் மற்றும் மொழி சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்திலும் -

இந்திய அரசமைப்புச் சட்டம் மாற்றப்படவேண்டும் என்று பாதல் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவில் ஆளும் பாரதிய ஜனதாக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சிரோன்மணி அகாலி தள் 1978ஆம் ஆண்டு முதல் மாநில சுயாட்சி கோரி வருவதும்,

இடையில் சில வருடங்கள் அது தளர்வுற்றிருந்த போதும் காஷ்மீரில் சுயாட்சிக் கோரிக்கை சமீபத்தில் எழுப்பப்பட்டதை அடுத்து பஞ்சாபில் மீண்டும் மாநில சுயாட்சிக் கோரிக்கை புத்துயிர் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கவை. (ஒ-8)

### அமெரிக்கர் கடத்தல்

பிலிப்பைன்ஸில் 'அபு சாயப்' தீவிரவாதிகள் அமெரிக்கர் ஒருவரை பணயக்கைதியாக கடத்திச் சென்றுள்ளனர். (ஒ)

### அந்நிய செலாவணி மோசடி குறித்து

## 'ஸ்ரார்' தொலைக்காட்சி உட்பட 3 நிறுவனங்களின் மீது விசாரணை

"ஸ்ரார்" உட்பட 3 தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் அந்நிய செலாவணி முறைப்படுத்தும் சட்டத்தை மீறியுள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை அடுத்து மேற்படி நிறுவனங்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக டில்லி உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. விசாரணைகள் குறித்த விவரங்களை இந்திய அரசின் சார்பில் பிரதி சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

"ஜீ" நிறுவனத்தின் மீது கடந்த ஓர் ஆண்டாகவும், "ஸ்ரார்" மற்றும் "சொனி" நிறுவனங்கள் மீது சமீபகாலம் முன்பாகவும் விசாரணைகள் நடந்து வருவதாக அந்த விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு விளம்பரத்தைப் பத்து வினாடிகள் காண்பிப்பதற்கு சராசரியாக 10 ஆயிரம் இந்திய ரூபாவை தொலைக்காட்சி நிறுவனங்கள் அளவிடுகின்றன. இதன் மூலம் பல கோடி ரூபாய்களை வருமானமாகப் பெற்று வரும் சில தொலைக்காட்சி நிறுவனங்கள், அதற்கான வருமானவரிக் கணக்கில் ஏமாற்றி வருவதுடன் வெளிநாட்டுப் பணப் பரிமாற்றத்தில் மோசடி செய்வதாகவும் கூறப்படுகிறது. (ஒ)

# நஷ்டஈடு கோரியவர்களில் பலருக்குக் கொடுப்பனவு

சுன்னாகம், ஓக. 31

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த கால அசம்பாவிதங்களின் போது ஏற்பட்ட சேதங்களுக்கு நஷ்டஈடு கோரியோரில் கணிசமானோருக்கு அக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயிரத்து 500 ரூபாவுக்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான 25 ஆயிரம் ரூபா நஷ்டஈட்டுக் கொடுப்பனவு ஆயிரத்து 127 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 437 பேருக்கு முதற்கட்டக் கொடுப்பனவுக்கும், 43 பேருக்கு இறுதிக்கட்டக் கொடுப்பனவுக்குமாகச் சிபார்சு செய்யப்பட்டு, விவரங்கள் அரச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் உள்ள 33 பேருக்கு முழுமையான கொடுப்பனவு வழங்கப்பட்டு விட்டதாகவும் மேலும் 78 பேருக்கு இக்கொடுப்பனவு வழங்குவதற்கான ஆவணங்கள் யாழ் அரச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-27)


## தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல புகைப்படத் துறையைச் சேர்ந்த ஸ்தாபனம் ஒன்றிற்கு கணக்காளர், பெண் லிகிதர்கள் தேவை.

தகுதியுடையவர்கள் சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

**ஸ்ரீ அமலா ஜுவல்லர்ஸ்**
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/12757)


## பெயர் மாற்றம்

பருத்தித்துறை பெண்கள் உயர்தர பாடசாலையில் கல்வி கற்கும்

வேலும்மயிலும் - திருநிறைச்செல்வி
ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து
(31 - 08 - 2000)

**வேலும்மயிலும் நிறைஞ்சனா**

என மாற்றிக் கொள்கிறேன்.

வே. நிறைஞ்சனா,
கரும்பியோடை, சமரபாகு,
வல்வெட்டித்துறை. 77844)

## தொண்டர் ஆசிரியர்களின் கவனத்திற்கு

எமது சங்கத்தில் பதிவினை மேற்கொண்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியும் நியமனம் கிடைக்கப் பெறாதவர்கள் **03-09-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு** நேர்முகப்பரீட்சைக்குச் சமர்ப்பித்த சகல ஆவணங்களின் மூலப் பிரதிகளுடனும் மற்றும் ஏனைய ஆவணங்களுடனும் சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொண்டர் ஆசிரியர் சங்கம்
யாழ். மாவட்டம்.
(77835)

உ

கொக்குவில் கிழக்கு

## பொற்பதி விநாயகர் ஆலயம் மஹோற்சவ விஞ்ஞாபனம்

கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 02 - 09 - 2000 சனிக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13-09-2000 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும் என்பதை அறியத்தருகின்றோம்.

மேற்படி ஆலயத்தின் மண்டபத் திருப்பணி வேலை நடைபெறுவதால் அதற்கு நிதிஉதவி செய்ய விரும்புவோர் ஆலய நிர்வாகஸ்தரிடம் மட்டும் நிதியைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

ஆலய நிர்வாகஸ்தர்,
தியாகராஜ ஐயர் நடராஜ சர்மா.
(77837)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஓக. 31

கோண்டாவில் நெட்டிலிப்பாய் அருள்மிகு ஸ்ரீ பிள்ளையார் திருக்கோயிலின் வருடாந்த இலட்சார்ச்சனை கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 11 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 1008 சங்காபிஷேகம் பூசையுடன் இலட்சார்ச்சனை நிறைவுபெறும்.

(ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஓக. 31

வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சி தோட்டம் அருள்மிகு ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்துபத்துத் தினங்கள் திருவிழா நடைபெறும்.

சப்பறத்திருவிழா இன்றுவியாழக்கிழமை மாலை 5 மணிக்கும் நாளை தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

உற்சவ காலக் கிரியைகள் யாவும் மஹோற்சவகுரு 'சிவாகம கிரியா திலகம்' சிவஸ்ரீ ச.மு. ரவிக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

(ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 31

இளவாலை புனித அன்னாள் ஆலய புனித கன்னி மரியாள் பிறப்பு விழா நேற்று புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு முதல் நன்மைத் திருப்பலியும் மறுநாள் வியாழக்கிழமைபிற்பகல் 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறவுள்ளன.

(க)

★ ★ ★

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத்தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமைகாலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ-69)

★ ★ ★

யாழ். ஆஸ்பத்திரி வீதி, புனித அடைக்கல அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு பங்குத்தந்தை அகவொளி அருட்திரு. இராசநாயகம் அடிகள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஒன்பது தினங்கள் ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று எதிர்வரும் 8 ஆம் திகதி திருநாள் திருப்பலி, திருச்சொரூப பவனி ஆசீர்வாதம் ஆகியவற்றுடன் திருவிழா நிறைவுபெறும். (க-30)

★ ★ ★

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள்ஆலயவருடாந்தகும்பாபிஷேக தின சங்காபிஷேகமும், மணவாளக்கோலத் திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன. (க-30)

★ ★ ★

பண்ணாகம் ஆலடி வைரவப்பெருமான் ஆலயத்தில் நடைபெற்றுவந்த பன்னிரு திருமுறைப் பாராயணத்தின் பூர்த்திவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது.

இன்றுவைரவப்பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன.

(9 ஆம் பக்கமும் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் தங்கம்மா

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுப்பிரமணியம் தங்கம்மா நேற்று 30 - 08 - 2000 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற யாழ். கச்சேரி லிகிதர் வைரமுத்து சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லம்மா (நுணாவில்) மற்றும் வல்லிபுரம் (நுணாவில்) கோவிந்தப்பிள்ளை (கோப்பாய்), பொன்னம்மா (கனடா) ஆகியோரின் சகோதரியும், சண்முகவடிவேல் (ஆசிரியர் — ஈச்சமோட்டை), சந்திரவதனம் (நுணாவில்), சுதாமணி (டென்மார்க்), சௌந்தரராஜன் (கனடா), இளங்குமரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஷ்பராணி, இரத்தினராசா (வடபிராந்திய போக்குவரத்துச் சபை), சிறிராமச்சந்திரன் (டென்மார்க்), மாலா (கனடா), பபி (கனடா) ஆகியோரின் மாமியாரும், சிறீகரன் — கவிதா (பிரான்ஸ்), கௌரி (இலங்கை), மகிந்தன் (பிரான்ஸ்), கஜேந்திரன் (இலங்கை), சுதர்ஜனன் — சுகி (ஹொலன்ட்), கோபால் — சுகந்தினி (ஜேர்மனி), கெங்காதரன் — சுபாஜினி (லண்டன்), சுபத்திரன் (லண்டன்), சுசீலன் (இலங்கை), காலஞ்சென்ற அகிலன் மற்றும் தெய்வீகன், சஞ்சீவன், மஞ்சு, காலஞ்சென்ற அருந்ததி (டென்மார்க்), பிறைன், சாளினி, சரண்ஜா, அஜந்தா, அபினா, பிரவீன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வனேசா (பிரான்ஸ்), சுவித்தா, காவியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31 - 08 - 2000) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. சண்முகவடிவேல்
(மகன்)

தற்காலிக முகவரி:-
14 / 1, K. K. S. றோட்,
யாழ்ப்பாணம்.
(I. B. M. S. அருகில் உள்ள லேன்). (77867)

## திருமதி பொன்னப்பா இராசம்மா

தாவடியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் செட்டித் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னப்பா - இராசம்மா அவர்கள் 29—08—2000 செவ்வாய்க்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னப்பாவின் அன்பு மனைவியும், சுப்பிரமணியம் (வர்த்தகர்—செட்டித் தெரு, நல்லூர்), காசிப்பிள்ளை (வர்த்தகர்—இணுவில்), யோகேஸ்வரி (வெள்ளவத்தை) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேஸ்வரி (செட்டித்தெரு, நல்லூர்), காலஞ்சென்ற சின்னம்மா (இணுவில்), இராசேந்திரம் (வருமான வரித்திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவபாலன் (கனடா), சித்திரகலா (கனடா), சிவகுமார் (ஜேர்மனி), சிவகாந்தன் (கனடா), காலஞ்சென்ற சிவகங்கா மற்றும் சிவனேசன் (கனடா), காந்தகுமார் (லண்டன்), வரதராஜா (வர்த்தகர் — இணுவில்), சுசீலாதேவி (வவுனியா), முரளீதரன் (கொழும்பு), சீத்தா (வெள்ளவத்தை), சண்முகநாதன் (கனடா), தனமலா (கனடா), தர்ஷினி (கனடா), வாணி (கனடா), சரோஜினிதேவி (இணுவில்), சிவலிங்கம் (ஆசிரியர்— வவுனியா கொன்வென்ற்), கலையரசி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுலோசனன், சுஜன், சஜீன், சிந்துஜா, நிருஜா, உஷானியா, சாயீஸ்சன், கஜன், அருண், சசிதரன், அம்பதீசன், அபிநயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(30-8-2000) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. சுப்பிரமணியம்
(வர்த்தகர்)
பொ. காசிப்பிள்ளை
(வர்த்தகர்-இணுவில்)
(பிள்ளைகள்)

இல. 4, செட்டித் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம். (சி/12767)


நாளை (01 - 09 - 2000) சுழிபுரம் - பறாளாய்

# ஈசுர விநாயகரின் பாற்காவடித்தினம்

நாளைய பாற்காவடிகள் நம்மைச் சிந்திக்க வைக்கட்டும்.

(77845)

சோழியூரான் - பிறைசூடிக்குரு.

## உதயன்

### தூர இருந்து அவதானிப்போர்

கொழும்பில் கடந்தவாரம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய இலங்கைக்கான கனடா நாட்டின் தூதுவர் திருமதி ருத் ஆக்கி போல்ட் கவனத்தில் கொள்ளவேண்டிய தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு மத்தியஸ்தராகவோ அல்லது ஏற்பாட்டாளராகவோ பணிபுரிவதற்குத் தமது நாடு தயாராக உள்ளது. இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டால் அந்தப் பணியைச் செய்யும் என்பது அவரது கூற்று.

அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு, அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிப்பதற்கு கடந்த வருடம் விருப்பம் தெரிவித்த நாடுகளில் கனடாவும் ஒன்று. ஆனால் இவ்வருடம் பெப்ரவரி மாதத்தில் சந்திரிகா அரசு நோர்வே அரசாங்கத்தை ஏற்பாட்டாளராகப் பணிபுரியுமாறு உத்தியோகபூர்வமாகக் கேட்ட பின்னர், பிரிட்டன், கனடா உட்பட மேற்கு நாடுகள் இது விடயத்தில் தூர நின்று பார்ப்பவர்களாகவே இப்போது உள்ளனர்.

ஆறுமாதங்கள் கடந்துவிட்டபோதிலும் நோர்வேயின் சமரச முயற்சி சாதகமான, பெரிய அளவிலான பெறுபேறு எதனையும் தரவில்லை. நோர்வேயின் முயற்சிக்குக் காத்திருக்கப் போவதில்லை; அது குறித்து அக்கறை இல்லை; என்ற பாணியில் ஜனாதிபதி சந்திரிகா தமது சொந்த தீர்வு ஒன்றை (அரசமைப்புச் சீர்திருத்த சட்டநகல் வடிவில்) இம்மாதம் மூன்றாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

ஆனால் அதை நிறைவேற்றுவது கடினம் என்று கண்டு கொண்டு, சிங்களக் கடுங்கோட்பாட்டாளரின் எதிர்ப்புக்கு முகங்கொடுக்க இயலாமல் பின்வாங்கி விட்டார்.

இலங்கை அரசாங்கத்தினால், அது எந்தக் கட்சியின் ஆட்சியானாலும் சரி, மூன்றாவது தரப்பின் உதவியின்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது, நியாயமான தீர்வு காணமுடியாது என்பதனை பார்வையாளர்களாக இருக்கும் வெளிநாடுகள் அவதானித்துள்ளன.

அவ்வாறு அவதானித்த நாடுகளில் கனடாவும் ஒன்றெனலாம். கனேடியத் தூதுவர் வெளியிட்டுள்ள தகவல் அல்லது அழைப்பு, தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய நீதியான தீர்வு ஒன்றை இலங்கை அரசாங்கம் எதுவும் தனது சொந்தத்தில் காணமாட்டாது என்பதனை கோடிட்டுக் காட்டுவதாகவும் உள்ளது.


தமிழர் பிரச்சினைக்கெனத் தனியான, தனித்துவமான தீர்வை வகுக்காமல், முழுநாட்டுக்கும் பொதுவான அதிகாரப் பரவல் என்ற திட்டத்தைத் தூக்கிப்பிடித்து ஆடுவதிலிருந்தே -

இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்களை இனங்கண்டு அவற்றுக்கெனக் குறிப்பான விஷேட தீர்வைக் கொண்டுவருவதற்குக் கொழும்பு அரசு மனங்கொள்ளவில்லை - என்பது புலனாகின்றது.

இதனையும் பார்வையாளர்களாக இருந்து வரும் வெளிநாடுகள் இலகுவில் புரிந்துகொள்ளும்.

விடுதலைப்புலிகளுடன் பேசி அரசியல் தீர்வு ஒன்றை வகுத்து நாட்டை முன்னேற்ற வேண்டும் என்பதில் இருக்க வேண்டிய ஆர்வமோ அக்கறையோ அரசிடம் காணப்படவில்லை. புலிகளை ஓரங்கட்டிவிட்டு அல்லது ஒழித்துவிட்டு தம்பாட்டில், தாம் நினைத்த தீர்வு ஒன்றை - ஒரு தலைப்பட்சமான தீர்வு ஒன்றை - கொண்டு வருவதிலேயே அதற்கு அதிக அக்கறை.

இந்த அணுகுமுறை அல்லது உத்தி சரிப்பட்டு வராது என்பதனை கொழும்பு அரசுகள் உணர்வது எப்போது? அதனை உணரும் வரை தெற்கு அரசியல்வாதிகளிடம் இருந்து நீதியான தீர்வை எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? கனடாவின் பிந்திய அழைப்பு தமக்கு விழுந்த உறைப்பான அடி என்பதையாவது அவர்களால் கண்டு கொள்ள முடியாதா? என்ன!



புலோலியூர் க.தம்பையா எழுதிய 'அழியும் கோலங்கள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா அண்மையில் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் நூலாசிரியர் உரையாற்றுவதையும், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவிடமிருந்து நூலின் முதற்பிரதியை வர்த்தகர் த.உருத்திரா பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம். (ஐ-173)
*படம்: வடமராட்சி செய்தியாளர்*

### வலுவிழந்தோருக்கு உபகரணங்கள்

சுன்னாகம்,ஓக.31

ஊனமுற்ற மற்றும் வலுவிழந்தவர்களுக்கான உபகரணங்களை வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம் வழங்கவுள்ளது.

இதன்படி ஊன்றுகோல், முச்சக்கர வண்டி, சக்கர நாற்காலி, காது கேட்கும் கருவி, மூக்குக்கண்ணாடி, வெள்ளைப் பிரம்பு ஆகியன ஊனமுற்ற மற்றும் வலுவிழந்தவர்களுக்கு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உபகரணங்கள் தேவைப்படும் வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஊனமுற்றவர்களைத் தம்முடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு வலி.வடக்கு பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் சு.வரதபாஸ்கரன் கேட்டுள்ளார். (ஐ-27)



சுன்னாகம் லயன்ஸ் கழக ஆதரவில் சுன்னாகம் ஐயன்னா சன சமூக நிலைய மண்டபத்தில் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. முதல் கண்ணாடியை வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.மா.செல்வராசா வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். லயன்ஸ் கழ கத் தலைவர் என்.அரசரட்ணமும் அருகில் காணப்படுகிறார். (ஐ-27) *படம்: சுன்னாகம் செய்தியாளர்*

## அவசரகாலச் சட்டம் குறித்து விசேட அறிவித்தல் வரும்!

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் அவசரகாலச் சட்ட விதிகளை நீடிக்கும் விசேட அறிவித்தலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் பத்தாம் திகதி வெளியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்திற்குப் பதிலாக, அவசரகாலச் சட்டத்தை நீடிக்க ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு மறைமுகமாக உதவுமெனக் கருதப்படுவதாக சட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த அறிவிப்பின் மூலம், கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் கூட வேண்டிய அவசியம் ஏற்படாதெனவும் அடுத்த நாடாளுமன்றம் கூடி முதல் அமர்வின் பத்து நாள்களுக்கிடையில் அவசரகாலச் சட்ட நீடிப்பை மேற்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

1994ஆம் ஆண்டும் பொதுத் தேர்தலின்போது இதேபோன்றதொரு அறிவிப்பின் மூலம் அப்போதைய ஜனாதிபதி டி.பி.விஜேயதுங்க அவசரகாலச் சட்ட நீடிப்பை மேற்கொண்டிருந்தார்.

இந்த மாத முற்பகுதியில் நாடாளுமன்றம் கூடியபோது நீடிக்கப்பட்ட அவசரகாலச் சட்ட நீடிப்பு எதிர்வரும் 9ஆம் திகதியுடன் முடிவிற்கு வருவதும் தெரிந்ததே. (ஐ-6-8)

## சிங்கள உறுமய கட்சியும் யாழ்ப்பாணத்தில் போட்டி!

### பாதுகாப்பு வழங்கக் கோரிக்கை

கொழும்பு,ஓக.31

பொதுத் தேர்தலில் 'சிங்கள உறுமய' கட்சி யாழ். மாவட்டத்திலும் போட்டியிட உள்ளது.

தமது கட்சியின் சார்பில் போட்டியிட யாழ்ப்பாணத்தில் இருந்தும் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் திலக் கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

யாழ். சென்று வேட்புமனுவைத் தாக்கல் செய்வதற்குரிய விமானப் போக்குவரத்து வசதிகளைச் செய்து தருமாறு நாம் தேர்தல் ஆணையாளரைக் கேட்டுள்ளோம். நாம் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்லர். புலிகள் இயக்கத்திற்கு மட்டுமே நாம் எதிரானவர்கள் என்று அவர் கூறினார்.

அதேவேளை யாழ். மாவட்டத்தில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை வழங்குமாறு கேட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். வேட்பு மனுவை தாக்கல் செய்ய யாழ். செல்லும் அரசியல்வாதிகளுக்கென பாதுகாப்பு அமைச்சு விமானப் போக்குவரத்து ஒழுங்குகளை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

## ஜே.வி.பி. தலைவர் நாடு திரும்புவரர்?

கொழும்பு,ஓக.31

தலைமறைவு வாழ்க்கை நடத்தி வரும் ஜே.வி.பி. இயக்கத் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க நாடு திரும்பக் கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

சோமவன்ஸ நாடு திரும்பினால் கைது செய்யப்படுவாரா என்று கேட்டதற்கு கருத்து எதுவும் தெரிவிக்க பொலீஸார் மறுத்து விட்டதாகக் கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

சோமவன்ஸ அமரசிங்கவை இரகசியமான முறையில் நாட்டுக்குள் அழைத்துவர தம்மால்முடியும் என்று ஜே.வி.பியின் அதிகார பீடத்தைச் சேர்ந்த ஒருவர் கூறியதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டு தெற்கில் ஏற்பட்ட கலகங்களின் போது நாட்டைவிட்டுத் தப்பிய இவர் தற்சமயம் ஜப்பானில் தங்கி இருந்து கட்சியின் சர்வதேசப் பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறார். (ஐ-6-20)

## ஒலிம்பிக் போட்டியாளர் தெரிவில் புறக்கணிக்கப்பட்டதாக முறையீடு!

### தளுவத்தையின் மகள் மனுத் தாக்கல்

அடுத்த மாதம் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற தமது மகளுக்கு இடமளிக்கப்படாததை ஆட்சேபித்து முன்னாள் இராணுவத் தளபதி றொஹான் தளுவத்த குடும்பத்தினர் நீதிமன்றில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர். தேசிய ஒலிம்பிக் குழுவுக்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

றொஹான் தளுவத்தையின் மகள் ரதீஷா ஒரு நீச்சல் வீராங்கனை. இலங்கை ஒலிம்பிக் குழு இம்முறை நீச்சல் போட்டிக்கு தீக்சண ரட்ணசேகர என்பவரைத் தெரிவுசெய்துள்ளது. இந்நிலையில் தீக்சணவை விட தன்னால் கூடிய தூரத்தை குறைந்த நேரத்தில் நீந்த முடியும் என்று தளுவத்தையின் மகளான ரதீஷா தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

மேற்படி ரிட் மனு மீதான விசாரணை முடியும்வரை ஒலிம்பிக் போட்டியாளர்களைத் தெரிவுசெய்வதை ஒத்திவைக்குமாறு கேட்டு தேசிய ஒலிம்பிக் குழுவுக்கு தளுவத்தையின் சட்டத்தரணிகள் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

### வலி வடக்குப் பிரிவில் 139 குடும்பங்களுக்கு 2,000 ரூபா கொடுப்பனவு

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த 139 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுன்னாகம் மக்கள் வங்கியில் வைத்து வழங்கப்படவுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக கொடுப்பனவு பெறுவோர் விபரம் வருமாறு:-

- ★ மல்லாகம் தெற்கு (ஜே-212) பிரிவு 48 பேர்.
- ★ மல்லாகம் மத்தி (ஜே-213) பிரிவு 10 பேர்.
- ★ மல்லாகம் வடக்கு(ஜே-214) பிரிவு 9 பேர்.
- ★ அளவெட்டி வடக்கு(ஜே-215) பிரிவு 10 பேர்.
- ★ அளவெட்டி மத்தி.(ஜே-216) பிரிவு 3 பேர்.
- ★ அளவெட்டி கிழக்கு(ஜே-217) பிரிவு இருவர்.
- ★ கணேஸ்வரம் (ஜே-218) பிரிவு ஒருவர்.
- ★ அளவெட்டி தெற்கு(ஜே-219) பிரிவு 14 பேர்.
- ★ அளவெட்டி மேற்கு(ஜே-220) பிரிவு 9 பேர்.
- ★ இளவாலை வடக்கு(ஜே-221) பிரிவு 3 பேர்.
- ★ பன்னாலை (ஜே-224) பிரிவு 21 பேர்.
- ★ தெல்லிப்பழை கிழக்கு (ஜே-227) பிரிவு 4 பேர்.
- ★ துர்க்காபுரம் (ஜே-229) பிரிவு 3 பேர்.
- ★ கட்டுவன் மேற்கு (ஜே-239) பிரிவு 2 பேர்.

ஏற்கனவே கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டும் பணம் பெறாத அளவெட்டி வடக்கு, அளவெட்டிகிழக்கு, அளவெட்டி தெற்கு, அளவெட்டி மேற்கு பிரிவுகளைச் சேர்ந்தோரும் தவறாது செவ்வாயன்று சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் இக்கொடுப்பனவைப் பெறுமாறு வலி. வடக்கு பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-27)

### குளம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

சங்கரத்தை கொம்பாத்தாளைக் குளத்தை புனரமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் உதவியுடன் அவ்வூர் விவசாய சம்மேளனம் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டுள்ளது.

புனரமைப்புப் பணிக்கென பட்டினிக்கெதிரான நிறுவனம் மூன்று லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. இந்தக் குளத்தின் புனரமைப்பினால் அப்பகுதியில் உள்ள எழுபதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-173)

## சாயி சிந்தனை



மகாபாரதத்தில், கௌரவர்கள் பாண்டவர்களின் மீது தீய எண்ணங்களை வளர்த்துக் கொண்டே வந்தனர். இவைகள் ஓரளவிற்கே பாண்டவர்களைத் துன்புறுத்தின. ஆனால் கௌரவர்களை அடியோடு அழித்துவிட்டன. ஆகவே, தீய எண்ணங்கள் யார் மீது ஒருவர் கொண்டாலும் அதனால் அவர் சிறிதளவே பாதிக்கப்படலாம். ஆனால் இந்த எண்ணத்தைக் கொண்டவர் அடியோடு நாசமடைய நேரும். நல்ல எண்ணங்களை வளர்த்தால் அது அவர்களுக்கும் நன்மை பயப்பதோடு எல்லோருக்குமே நல்லதாக - சமுதாயத்துக்கே நலனாக உருவாகும். ஆகவே மனதில் ஒரு எண்ணம் தோன்ற ஆரம்பித்ததும் அது நல்ல எண்ணமா, அல்லவா என்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இது நன்மையே அளிக்கக் கூடியதா பிறருக்கு நன்மை பயக்கக் கூடியதா என்று பகுத்தறிதல் வேண்டும். அது தீயதாயின் அதை உடனே நெஞ்சிலிருந்து அகற்றி விட வேண்டும். தீய எண்ணங்களைப் போக்க நல்லெண்ணங்களை வளர்ப்பதைத் தவிர வேறு எந்த வழியும் கிடையாது. (ஆதாரம்:- சனாதன சாரதி)

### உதயவாக்கு

வீட்டைத் துறப்பது, செல்வத்தை வழங்குவது, உயிரைக் கொடுப்பது இவைகளும் தியாகந்தான். ஆனால் அன்பானவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் தியாகம்தான் பெரிய தியாகம்.

*- மு.வ.*

### நாளை

ஆவணி 16

வெள்ளிக்கிழமை

*திதி:* திருதியை. நண்பகல் 12.09 வரை

*நட்சத்திரம்:* அத்தம் பிற்பகல் 4.34 வரை

விநாயக சதுர்த்தி விரதம்

*சுபநேரம்:* 6.05 - 7.35

*ராகுகாலம்:* 10.35 - 12.05

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# மக்களின் இடம்பெயர்வுகளால் வளங்கள் முடங்கும் தென்மராட்சி

குடாநாட்டு மக்களின் தேவைகளுக்கான உற்பத்திப்பொருள்களை வழங்குவதில் தென்மராட்சிப் பிரதேசம் முன்னணியில் இருந்து வந்ததை எவரும் மறுக்க முடியாது. மரக்கறி வகைகள், பழவகைகள், கிழங்குவகைகள், தானியவகைகள், நெல், தேங்காய் ஆகியவற்றுடன் விறகு போன்றவற்றையும் குடாநாட்டு மக்களுக்கு நாளாந்தம் வழங்கி வளங் கொழிக்கும் பிரதேசமெனப் பெயர் பெற்றது தென்மராட்சி.

தென்மராட்சியின் கிழக்குப் பகுதி மரக்கறி வகைகளையும் தெற்குப் பகுதி நெல்லையும் மேற்குப் பகுதி தானிய வகைகளையும், வடக்குப் பகுதி பழவகைகளையும் உற்பத்தி செய்வதில் பெயர் பெற்றவை.

மீசாலை என்றால் மாம்பழத்தையும் தனங்கிளப்பு என்றால் நெல்லையும் கைதடி என்றால் மரவள்ளிக் கிழங்கு, குரக்கன், சாமை, இராசவள்ளிக்கிழங்கு ஆகியவற்றையும் மந்துவில் என்றால் வாழைப்பழத்தையும் மட்டுவில் என்றால் கத்தரிக்காயையும் கச்சாய், மறவன்புலோ என்றால் மீன் வகைகளையும் அல்லாரை, வரணி, மிருசுவில், எழுதுமட்டுவாழ் என்றால் தேங்காயையும் ஞாபகப்படுத்தும் வளங்களை தென்மராட்சி பெற்றிருந்தது.

இவற்றினை விற்பனை செய்வதற்கென பெயர் பெற்ற சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் சந்தைகளையும் அவற்றுடன் கைதடி, வரணி, மிருசுவில், எழுதுமட்டுவாழ், சந்தைகளையும் தன்னகத்தே கொண்ட பெருமை அதற்கு உண்டு.

வளங்கள் பலவற்றால் பெருமை பெற்ற தென்மராட்சியின் தெற்கு, மேற்கு, வடக்குப் பகுதிகள் இன்று பாதிப்புக்கு உள்ளாகி, பெருமை சேர்த்த மக்கள் இன்றி பொலிவிழந்து காணப்படுகிறது

விளைவிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களை அறுவடை செய்து பயன் அனுபவிக்க முடியாத நிலையில் உற்பத்தியாளர்கள் வெளியேறியதும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை எடுத்துவர முடியாமல் விட்டு விட்டு வெளியேறியதும் மறக்க முடியாத சம்பவங்கள்.

செல்வத்தை தூக்கு (தனம் + கிளப்பு) என்னும் பொருளை உடைய தனங்கிளப்பு பகுதியில் 3 ஆயிரத்து 400 ஏக்கர் வயல்களில் விளைவிக்கப்பட்ட நெற்பயிர்களில் சுமார் ஆயிரத்து 200 ஏக்கர் நெற்பயிர்கள் அறுவடை செய்யப்படாமல் நாசமாகின.

உயிரைப் பணயம் வைத்து வயல்களில் இருந்து கொண்டுவரப்பட்ட லட்சக்கணக்கான புசல் நெல்லை பயன்படுத்த முடியாத நிலையில் வீடுகளில் கை விட்டு வரவேண்டிய நிலைமையை யுத்தம் ஏற்படுத்தியது. நெல் அறுவடை செய்த வயல்களில் ஆயிரக் கணக்கான ரூபா செலவில் மேற் கொள்ளப்பட்ட சிறுதானியப்பயிர்களையும் அறுவடை செய்ய முடியாமல் இடம்பெயர்வினால் கைவிட வேண்டி ஏற்பட்டது.

## செய்தி மடல்

ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் தென்மராட்சியின் மேற்கு, வடக்குப் பகுதிகளில் மேட்டுநில பயிர்களின் அறுவடை ஆரம்பமாகிய வேளையில் இடம்பெயர்வு ஏற்பட்டதால் உற்பத்திப் பயிர்களை கைவிட்டு வெளியேறும் நிலைமை ஏற்பட்டது.

மேட்டுநிலப் பயிராக விளைவிக்கப்பட்ட கத்தரி, மிளகாய், புகையிலை, வெங்காயம், கௌபி, நிலக்கடலை, வற்றாளை, குரக்கன், மரவள்ளிக்கிழங்கு ஆகிய பயிர்கள் கைவிடப்பட்டு கால்நடைகளுக்கு உணவாகின. மற்றும் சில இடங்களில் நீரின்றி அழிந்தும் போயின. ஆயிரக்கணக்கான ரூபாவை முதலிட்டு பயிர்ச்செய்கையை மேற்கொண்டவர்கள் உரிய பயனை பெற முடியாமல் கடன்காரர்களாக அலைய இடம்பெயர்வு வழிவகுத்தது.

## பழவகைகள்

- தென்மராட்சி மண்ணுக்கு புகழ் சேர்க்கும் கனிவகைகளான மா, பலா ஆகிய மரங்கள் பிரதேசத்திலுள்ள 90 சதவீதமான காணிகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இருவாட்டி தரை அமைப்பான காணிகளிலும், பிரதேசத்தில் உள்ள அனைத்து வீடுகளிலும் பயன் தரு மரங்களாக இவை உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் பயன் தருவதால் பல குடும்பங்கள் இம் மரங்களிலிருந்து கிடைக்கும் பழங்களால் போதிய வருமானத்தினைப் பெறக்கூடியதாக இருந்தது. பிரதேசத்தில் உள்ள சுமார் 40 சதவீதமான குடும்பங்கள் இந்த மரங்களை நம்பியே தமது வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

மா,பலா மரங்களில் அறுவடைக்குத் தயாராக பழங்கள் இருந்த வேளையில் மக்கள் இடம்பெயர்ந்து சென்றதால் இவற்றின் பயனை அடைய முடியவில்லை.

மரங்களில் குலை குலையாகத் தொங்கிய பழங்களை இடம்பெயராமல் ஊரில் இருந்தவர்களும் திருடர்களும் அபகரித்து வரணி, வடமராட்சிப் பகுதிகளில் சந்தைப்படுத்தி வருமானத்தைத் தேடிக்கொண்டனர்.

குடாநாட்டு மக்களின் அன்றாடத் தேவைப் பொருள்களில் ஒன்றான தேங்காயின் பெரும்பகுதி தென்மராட்சிப் பகுதியிலிருந்தே ஏனைய பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் தென்மராட்சி பச்சிலைப் பள்ளிப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் குடும்பங்கள் தஞ்சமடைந்துள்ள போதிலும் இடம்பெயர்வு ஏற்பட்டு 3மாதங்கள் கடந்த நிலையிலும் தேங்காயின் விலை அதிகரிக்காமல் இருந்து வருகிறது.

உரிமையாளர்கள் இல்லாத தென்னந்தோட்டங்கள், வளவுகளில் உள்ள தென்னை மரங்களில் உள்ள தேங்காய்கள் திருடர்களின் கைவரிசைக்கு உள்ளாவதால் தேங்காய்க்கு இன்றும் தட்டுப்பாடு ஏற்படவில்லை.

தென்மராட்சி தெற்குப் பகுதிகளான கச்சாய், மறவன்புலோ, கோவிலாக்கண்டி ஆகிய பகுதிகளில் உள்ள கடலேரியில் பிடிக்கப்படும் மீன் வகைகள் தென்மராட்சிப் பகுதி மக்களின் மீன் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தன. யுத்த ஆரம்பத்திலேயே இப்பகுதி மக்கள் இடம்பெயர நேர்ந்ததால் கடல் தொழிலை நம்பியிருந்த 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வருமானத்தை இழக்க நேரிட்டது. பல மீன்பிடி உபகரணங்கள் பல மாதங்களாக மீட்க முடியாத நிலையில் கடலிலேயே உள்ளன.

இந்த வளங்களை உற்பத்தி செய்தவர்களின் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு உத்தியோகத்தர்களும் பிரதேசத்தில் இருந்தனர். பிரதேசத்தில் உள்ள குடும்பங்களில் 35 சதவீதமானோர் உத்தியோகம் பார்ப்போரில் அடங்குவர்.

குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த வீதத்தினரே உத்தியோகத்தர்களாக இருந்த போதிலும் அவர்களும் இந்த மண்ணின் வளத்தை அதிகரிக்கச் செயல்பட்டதால் ஒரு தன்னிறைவான நிலையை தென்மராட்சிப் பிரதேசம் கண்டது.

அரச தொழிலைவிட மண்ணின் வளம் தமக்குக் கைகொடுக்கும் என்றும் பெரும் வருமானத்தை வழங்கும் என்றும் நம்பியோர் எண்ணிக்கை அதிகம். உத்தியோகத்தர் பலர் பகுதி நேர உற்பத்தியாளர்களாக இருந்ததும் இந்த மண்ணுக்கு கிடைத்த பெருமை ஆகும்.

17 வருட போராட்ட வரலாற்றில் இடம்பெற்ற பெரும் தாக்குதல்களின் போதும் படையெடுப்பின் போதும் சிறுசேதங்களுடன் தப்பித்துக் கொண்ட தென்மராட்சியின் மேற்குப் பிரதேசத்தில் (அதாவது சாவகச்சேரி நகர் முதல் கைதடி - கோப்பாய் பாலம் வரை) தற்போது குண்டுகள் விழாத காணி இல்லை என்னும் அந்த அளவுக்கு அது யுத்த பூமியாக மாறியுள்ளது என்றும் இப்பகுதிக்கு எவரும் செல்ல முடியாததால் இப் பிரதேசத்துக்கு ஏற்பட்ட ஒட்டுமொத்த சேதங்கள் கணக்கிட முடியாத நிலை இருந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஷெல்மழைக்கு அஞ்சி பதுங்கு குழிக்குள் இரண்டு மாதமாக மறைந்து வாழ்ந்து தொடர்ந்து அங்கு இருக்க முடியாது என்ற நிலையில் வலிகாமம், வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் உள்ள உறவினர்களுடன் இணைந்து கொண்டவர்கள் தெரிவித்த தகவலின்படி, மேற்குறித்த பகுதியில் சுமார் 70 சதவீதமான இருப்பிடங்கள் பலத்த சேதங்களுக்கும் 20 சதவீதமான இருப்பிடங்கள் சிறு சேதங்களுக்கும் உள்ளாகி இருப்பதாகவும் நம்பப்படுகிறது. விரல் விட்டு எண்ணக்கூடிய இருப்பிடங்களே எதுவித சேதமும் இன்றி தப்பியதாகவும் அறிய முடிந்தது.

அனர்த்தங்களுக்கு இருப்பிடங்கள், பயன்தரு மரங்கள் மட்டுமன்றி கல்விக் கூடங்கள், வழிபாட்டுத் தலங்கள், வைத்திய நிலையங்கள், பராமரிப்பு நிலையங்கள், கைவிடப்பட்ட நிலையில் உள்ள வாகனங்கள் எதுவுமே தப்பவில்லை என்று கூறப்படுகிறது. இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் மீண்டும் தமது ஊருக்குச் செல்ல நேர்ந்தால் தமது இருப்பிடங்கள் உள்ள நிலையைப் பார்க்கும் போது என்ன செய்வார்களோ தெரியாது.

**ஐ. கிருஷ்ணன்**
*(தென்மராட்சிச் செய்தியாளர்)*

இவற்றுடன் இப் பிரதேசத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய அரச நிறுவனங்கள் பல இடம்பெயர்வினால் செயல்பட முடியாமல் அடுத்தவர் அலுவலகங்களின் உதவியில் கையேந்தி வாழ வேண்டிய நிலையில் உள்ளன. இந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் முற்றுப் பெறாமல் கைவிடப்பட்டுள்ளன.

இடம்பெயர்வினால் கைவிடப்பட்ட அலுவலக ஆவணங்கள் பாதுகாக்கப்படாவிட்டால் இந்த அலுவலகங்களில் கடமைபுரியும் ஆயிரக் கணக்கான ஊழியர்களின் குடும்பங்கள் அநாதைகளாக மாறும் நிலையும் தோன்றலாம்.

*

---


### வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

# சந்தைப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்ட கடைக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் சந்தைப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்ட கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 2000.09.05 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் வலிகாமம் தெற்குப் பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் உரிய கேள்வி வைப்புப்பணம், கேள்விப் பத்திரப்பணம் ஆகியன செலுத்துவதன் பேரில் 2000.09.04ம் திகதி பி.ப. 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து 'உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும், மற்றையது 'தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.' என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கடை இலக்கம் எழுதப்பட்டு, அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபால் மூலம் 2000.09.05.ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 2000.09.05ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் அடையாள அட்டையையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும். எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு அதிகாரமுண்டு. இது சம்பந்தமான மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகை விவரம் | மாதவாடகை | கேள்விப்பத்திரப் பணம் | கேள்விவைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீடு |
|---|---|---|---|---|
| சந்தை தெற்கு வீதியிலுள்ள கடைகள் இல 04, 06, 07, 11, ஒவ்வொன்றுக்கும். | 475/- வீதம் | 200/- வீதம் | 1000/- வீதம் | 25,000/- |
| சந்தை உட்புறக் கடைகள் இல: 17, 18, 20, 22, 25, 27, 28, 30, 31, 32 ஒவ்வொன்றுக்கும். | 375/- வீதம் | 200/- வீதம் | 1000/- வீதம் | 20,000/- |

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
2000.08.28.

தி.மா.செல்வராசா ஜே.பி.யு.எம்,
தலைவர்

(C/12745)


# 5 ஆயிரம் அ.அட்டைகள் செயலகத்துக்கு வந்தன

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்ப்பாணத்திலிருந்து தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான 5 ஆயிரம் தேசிய அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து யாழ். செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த அடையாள அட்டைகளைத் தரம்பிரிக்கும் வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

பாடசாலை மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகள் தரம்பிரிக்கப்பட்டு யாழ். செயலக அடையாள அட்டைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் இந்த அடையாள அட்டைகளை யாழ். செயலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

## கௌரவிப்பு

வடமராட்சி,ஓக.31

தென்புலோலி காந்தியூர் வற்றாப்பளை அருள்மிகு கண்ணகை அம்மன் கோவிலில் நடைபெற்று வந்த அபிஷேகத்தினங்களில் தொடர் நற்சிந்தனைகளை பத்துத் தினங்களும் வழங்கிய வித்தகம் குரு பரமசாமியை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை ஆலயத்தில் நடைபெறும். (ஐ-173)

## பேச்சுக்கள் தோல்வி

சிங்கள மகாசம்பத பூமிபுத்திர மற்றும் சிங்கள உறுமய ஆகிய இரு கட்சிகளுக்கிடையே அரசியல் உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தித் தேர்தலில் போட்டித் தவிர்ப்பைக் கொண்டு வருவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்வியடைந்துள்ளதாக "சிங்கள உறுமய" கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தத்தமது கட்சிகளின் சின்னங்களில் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய மாவட்டங்களைத் தெரிவுசெய்வதில் ஏற்பட்ட தகராறுகளின் காரணமாகவே கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வி கண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10-186)


உ
சிவமயம்

## வாழ்த்துகின்றோம்

இன்று பொன்விழாக் காணும்
சிவஸ்ரீ யோகீஸ்வரக் குருக்கள்
தம்பதிகளை
ஸ்ரீ ஞான வைரவப் பெருமானின் திருவருள் பெற்று
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய
பரிபாலன சபையினர்,
வழிபடுநர் சபையினர்,
தொண்டர் சபையினர்,
அறநெறிப் பாடசாலை அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

கொக்குவில்
(77814)

# வடக்கு - கிழக்குக்கு இணைப்பு இல்லை; இரண்டுக்கும் இடையே தொடர்பு மட்டுமே!

## சிறிசேன குரேயின் கட்சி தேர்தல் விஞ்ஞாபனம்

கொழும்பு,ஓக.31

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்படமாட்டா. அதற்குப் பதிலாக இரண்டு மாகாணங்களும் தொடர்புபடுத்தப்படும்.

முன்னாள் அமைச்சர் சிறிசேன குரேயின் பிரஜைகள் முன்னணி என்ற புதிய கட்சி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புக்குப் பதிலாக 'அபெக்ஸ் கவுன்சில்' (APEX COUNCIL) என்ற உயர்மட்ட சபை அமைக்கப்படும்.

இதன் உறுப்பினர்கள் இரண்டு மாகாணங்களில் இருந்தும் இனவிகிதாசார அடிப்படையில் சம எண்ணிக்கையில் தெரிவு செய்யப்படுவர் என பிரஜைகள் முன்னணி தெரிவித்துள்ளது.

இந்த உயர்மட்ட சபை இரண்டு மாகாண சபைகளுக்கும், நாடாளுமன்றத்துக்கும் பொறுப்பாக இருக்கும். நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை பிரஜைகள் முன்னணி வரவேற்கிறது. எனினும் ஜனாதிபதியின் வரையறையற்ற அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். சட்டத்துறைக்கும் நீதித்துறைக்கும் கட்டுப்பட்டவையாக அவை இருக்க வேண்டும் - என்றும் பிரஜைகள் முன்னணி தெரிவித்துள்ளது.(ஐ-6)

## தேர்தல் கண்காணிப்புக் குழுவின் இறுதிஅறிக்கை உதவி வழங்கும் நாடுகளுக்கு அனுப்பப்படும்

கொழும்பு,ஓக.31

தேர்தல் வன்முறைகள் தொடர்பான கண்காணிப்பு நிலையம் இம்முறை தேர்தலுக்குப் பின்னர் தயாரிக்கும் தனது உத்தியோகபூர்வ அறிக்கையை இலங்கைக்கு உதவி வழங்கும் சகல நாடுகளுக்கும் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என நிலையத்தின் தலைவர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

இந்த அறிக்கைகள் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற பிரதான சர்வதேச நிலையங்களுக்கும் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். உதவி வழங்கும் நாடுகளுக்கு அந்தந்த நாடுகளின் தூதுவர்களின் மூலமாக அனுப்பி வைக்கப்படும் - என்றும் அவர் தெரிவித்தார்.

மூன்றாம் உலகநாடுகளுக்கு உதவி வழங்கும் போது அந்நாடுகளில் ஆட்சியமைப்பதற்கு நீதியான தேர்தல் நடத்தப்பட்டதா என உதவி வழங்கும் நாடுகள் ஆராய்கின்றன. எனவே இந்த அறிக்கை தொடர்பாக தூதுவர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-186)

## ஐ.தே.க.மாற்றுக் குழுவில் தேர்தல் சமயத்தில் பிளவு?

கொழும்பு,ஓக.31

நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வது ஆரம்பித்துள்ள இவ்வேளையில் ஐ.தே.கவின் மாற்றுக் குழுவில் பிளவுகள் தோன்றி இருப்பதாக கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

அமைச்சர்கள் சரத் அமுனுகம தனது இந்தக் குழுவை தேசிய அபிவிருத்தி முன்னணி (என்.டி.எப்) என்னும் பெயரில் புதிய கட்சியாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். அதே சமயம் தமது கட்சியை பொ.ம.ஐ.முன்னணியின் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றாக இணைத்துக் கொள்ளுமாறு கேட்டு அவர் பொ.ம.ஐ.முன்னணியின் பொதுச் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

தற்போதைய நிலையில் மாற்றுக் குழுவின் கட்சி பதிவு செய்யப்பட்டால் அதன் தலைவராக சரத் அமுனுகமவும், செயலாளராக ஜே.ஈ.டபிள்யூ சுரவீரவும் இணங்காட்டப்பட்டுள்ளனர். ஆனால் தற்போது இக்குழுவின் தலைவராக இருக்கும் விஜயபால மென்டிஸ் இதனை எதிர்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"ஐ.தே.க மாற்றுக் குழுவுக்கு நானே தலைவர்" என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை - சரத் அமுனுகமவுக்கு புதிய கட்சியுடன் தொடர்பு ஏதும் இல்லை என்று ஜே.ஈ.டபிள்யூ. சுரவீர நேற்றுமுன்தினம் இரவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

### செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், வரலாறும் சமூகக் கல்வியும் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 'சனத்தொகையும், குடும்பவாழ்க்கைக் கல்வியும்' பற்றிய செயலமர்வுகள் எதிர்வரும் முதலாம் இரண்டாம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் உள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலைகளில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், வரலாறும் சமூகக் கல்வியும் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் என்ற முறையில் பாடசாலைக்கு இரு ஆசிரியர் வீதம் இந்தச் செயலமர்வுகளில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (க-117)

## பல மாவட்டங்களில் பொ.ஐ.மு. வேட்பு மனு

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நுவரேலியா, கேகாலை, கண்டி,குருநாகல், அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களின் வேட்பு மனுக்கள் அந்த அந்த மாவட்ட செயலகங்களில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்டன.

சப்பிரகமுவ மாகாண முதலமைச்சர் அத்தாவுட செனவிரத்ன, அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ, பிரதி அமைச்சர் அநுரபிரிய தர்சன யாப்பா ஆகியோர் இந்த மாவட்டங்களின் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள முக்கியஸ்தர்களாவர்.

அதேசமயம் -

மட்டக்களப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வரதர் அணியைச் சேர்ந்த ஆர்.துரைரட்ணம் தலைமையிலான சுயேச்சைக்குழு நேற்றுமுன்தினம் கட்டுப்பணம் செலுத்தியது.

திருகோணமலையில் வி.சூரியமூர்த்தி தலைமையிலான சுயேச்சைக்குழு அன்று பிற்பகல் கட்டுப்பணம் செலுத்தியது. (இ-க-3-7)

### தவறிவிட்ட அ.அட்டைகள்

நல்லூர்ப் பகுதியில் தவறவிடப்பட்ட சில அடையாள அட்டைகள் நல்லூரில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை யசோதினி, திலகவதி கணபதி ஆகியோரின் தேசிய, விசேட அடையாள அட்டைகளே அவையாகும்.

உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சிறிசேன குரே - அஷ்ரப் தேர்தல் கூட்டணி ?

கொழும்பு,ஓக.31

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸும் சிறிசேன குரேயின் பிரஜைகள் முன்னணியும் இணைந்து ஐக்கிய தேசியக் கூட்டணியை அமைக்கவுள்ளதாக கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்றில் செய்தி வெளியாகி உள்ளது.

முஸ்லீம் காங்கிரஸின் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபின் கோரிக்கைக்கு அமைய முஸ்லீம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ரவூப் ஹக்கீமும், ஐக்கிய தேசியக் கூட்டணியின் செயலாளர் எம்.எம்.ஹிஸ்புல்லாவும் தத்தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளதாகவும் -

சிறிசேன குரேக்கு தலைமைப் பதவியை வழங்குவதற்காகவே இந்த ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் -

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கூட்டணிக்குத் தலைமைவகிக்குமாறு சிறிசேன குரேக்கு அஷ்ரப் அழைப்பு விடுப்பார் என்ற ஊகங்கள் அரசியல் வட்டாரங்களில் நிலவுவதாகவும் -

"நாட்டின் இரு பெரும் கட்சிகளுமே தடம்புரண்ட நிலையில் உள்ளன. இந்நிலையில் தேசிய நலன் கருதி இவ்வாறான கூட்டணிகளை கவனத்தில் எடுக்க வேண்டி உள்ளது. எனினும் இது தொடர்பான உத்தியோகபூர்வ அழைப்புகள் எதுவும் இன்னமும் எனக்குக் கிடைக்கவில்லை" என்று சிறிசேனகுரே கூறியுள்ளார். (ஐ-6)

## நாய்களுக்கும் இனப்பெருக்க கட்டுப்பாட்டுத் திட்டம்!

### கண்டி மாநகர சபை ஏற்பாடு

கட்டாக்காலி நாய்களை அழிப்பதை விடுத்து அவற்றின் இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் திட்டம் ஒன்றை கண்டி மாநகரசபை வகுத்துள்ளது.

கண்டி மாநகரசபையும், விலங்குகளின் அமைப்பொன்றும் (KAKP-AW) இணைந்து கட்டாக்காலி நாய்களைக்கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

உலக சுகாதார நிறுவனம் (WHO) மற்றும் ஐக்கிய இராச்சியத்தின், விலங்குகளின் பாதுகாப்புக்கான உலக சங்கம் (WSPA) என்பனவற்றினால் வழங்கப்படும் வழிகாட்டல்களின்படி ஏ.பீ.சீ. என்ற இந்த விலங்குகளின் பிறப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்படி ஏற்பாடுகளின் பிரகாரம், கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு பிறப்பு, இனவிருத்திக்கட்டுப்பாட்டிற்கான மருந்துகள், தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு பின்னர் கழுத்தில் பட்டை கட்டப்பட்டு மீண்டும் அவைகள் முன்னர் காணப்பட்ட இடங்களில் விடப்படும். அத்துடன் ஆண்டுக்கு ஒரு தடவை இவற்றின் முன்னேற்றங்களை மேற்பார்வை செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

"நாய்கள் கொல்லப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று இது பற்றி கருத்துத்தெரிவித்த மத்திய மாகாண ஆளுநர் கே.தெனாயக்க, கண்டி மேயர் ஆகியோர் குறிப்பிட்டனர். (ஐ-6)

## மக்கள் முகம்

வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைக்கு டாக்டர் க.இரகுநாதன் கடந்த ஜூலை மாதம் 17 ஆம் திகதி முதல் அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். (க-30)

★ ★ ★ ★ ★

அல்வாயைச் சேர்ந்தவரும் சமாதான நீதிவானுமான நடேசு துரைராஜா வடமராட்சிப் பகுதியில் விவாகப் பதிவாளராக நியமனம் பெற்றுள்ளார்.

★ ★ ★ ★ ★

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் ஒலிபரப்புச் சேவையின் பவளவிழாவை ஒட்டி நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் அளவெட்டி செ.நடராசா எழுதிய 'உணர்வுகள் ஒன்றுதான்' என்ற சிறுகதை இரண்டாம் பரிசுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

செ.நடராசா சிறுகதை மற்றும் நாடகம், நகைச்சுவைக் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் போன்ற பல ஆக்கங்களை எழுதிப் பல பரிசுகளைப் பெற்றுள்ளார்.

'அகலவத்தை' நடராசா என்ற பெயரில் இவர் முன்னர் தொடர்ச்சியாகப் பத்திரிகைகளில் எழுதிவந்துள்ளார்.

இவரால் எழுதப்பட்ட நாடகங்கள் பல இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டு பலரது பாராட்டையும் பெற்றுள்ளன.

தமது எண்பதாவது வயதில் இந்தச் சிறுகதைக்கான பரிசினைப் பெற்றுள்ள நடராசாவைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

நடராசா, இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரத்தின் தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★ ★ ★

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் தம்பியையா குணபாலசிங்கம் யாழ்ப்பாண மாவட்ட சமாதான நீதிவானாக மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் பா.பாலசுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.



இவர் ஸ்கந்தாவின் பழைய மாணவரும் அளவெட்டி நாகேஸ்வர நாராயண தேவஸ்தான பிரதான பொறுப்பாளருமாவார்.

சமூக சேவைகளில் ஆர்வமும் விருப்பமும் கொண்ட குணபாலசிங்கம் அளவெட்டி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும், அளவெட்டி மேற்கு முருகபுரம் ஸ்ரீரங்கன் சனசமூக நிலையத் தலைவராகவும், அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ.சங்க நெறியாளர் குழு உறுப்பினராகவும், வலி.வடக்கு கால்நடை வளர்ப்போர் சங்க நெறியாளர் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்க உபசெயலாளர், அளவெட்டி தெற்கு ஐக்கியநாணய சங்கத் தலைவர் போன்ற பதவிகளையும் இவர் வகித்து வருகின்றார். (ஐ-152)

★ ★ ★ ★ ★

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரியாக டாக்டர் செல்வி செல்வமினிதா தர்மலிங்கம் வடக்கு-கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை -

வேலணை கால்நடை வைத்திய அதிகாரியாக டாக்டர் செல்வி யூலியானா பிரான்சிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (க-180)

★ ★ ★ ★ ★

சாவகச்சேரி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கொடிகாமம் பகுதிக்குப் புதிய பொதுச் சுகாதாரப் பரிசோதகராக எஸ். நிர்மலானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் பயிற்சியை முடித்த இவர் முதன் முதல் கொடிகாமம் பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (க-109)

★ ★ ★ ★ ★

சமூக சேவையாளர் லயன் எஸ்.சந்திரலிங்கம் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக மல்லாகம் மாவட்ட நீதிபதி சு.பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கோப்பாய் பிரிவு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஆயுள் கால உறுப்பினரான இவர் கோப்பாய் அரிமா கழக உறுப்பினரும், அச்சுவேலி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவரும், அச்சுவேலி வடக்கு சனசமூக நிலைய முன்னாள் போஷகரும், பொருளாளருமாவார். (க-109-30)

★ ★ ★ ★ ★



பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மாணவி செல்வி மேனகா தவேந்திரன், அகில இலங்கை சைவ பரிபாலனசபை கடந்த ஆண்டு நடத்திய சைவசமய பாடப் பரீட்சையில் தரம் 6 இல் தோற்றி மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றமைக்காக வெள்ளிப் பதக்கத்தினையும் இதர பரிசில்களையும் பெற்றுள்ளார்.

இவரை அதிபர், ஆசிரியர் சக மாணவர்கள், ஊர் மக்கள் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்கள். (க)

★ ★ ★ ★ ★

யாழ். பல்கலைக்கழகத்தின் 1999/2000 கல்வியாண்டில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கென சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவராக க.பரமேஸ்வரனும், உப தலைவராக ம.யசோதரனும், செயலாளராக தி.தவரட்ணமும், உபசெயலாளராக பி.தயாளனும், பொருளாளராக க.றொக்சன் ஜெகனும், பத்திராசிரியராக இ.சிவதர்சினியும் தெரிவு செய்யப்பட்டதுடன் 5 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (க-10)

★ ★ ★ ★ ★

வடக்கு-கிழக்கு மாகாண தொழில்நுட்பக் கல்லூரிகளின் பணிப்பாளர் க.ஜெயரத்தினம் தமது 35 வருட கல்விச் சேவையை நிறைவு செய்து அண்மையில் ஓய்வுபெற்றுள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வணிகமாணி, வணிக முதுமாணிப் பட்டங்கள் பெற்ற க.ஜெயரத்தினம் கூட்டுறவுத்துறையில் தமது சேவையை ஆரம்பித்தார். யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளராக, உப அதிபராக நிறைவான பணி செய்து கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொழில் நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள வலயம் 4 இன் பணிப்பாளராக உயர்ந்தவர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வருகை விரிவுரையாளராக விளங்கிய இவர் கணக்காய்வு, கணக்கீடு, முகாமை, ஆளணி முகாமை ஆகியவற்றில் நிபுணத்துவம் வாய்ந்தவர்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட அவை உறுப்பினராகவும், வடபகுதி புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பகுதியின் பல் தொழிற்றிறன் விருத்திக் குழுவின் தலைவராகவும், நல்லூர் அரிமாக்கள் சங்கத்தின் 2000-2001 காலத் தலைவராகவும் பதவி வகிக்கின்றார். (க-30)

★ ★ ★ ★ ★

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஓய்வூதியர்களுக்கான சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவராக நா.சங்கரப்பிள்ளையும், செயலாளராக அ.வெ. அரியநாயகமும், பொருளாளராக எஸ்.குமாரசாமியும் தெரிவுசெய்யப்பட்டனர். நான்கு உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (க-111)



வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட ஸ்ரீ லக்ஷ்மி நாராயண கல்யாண மண்டபத்தின் திறப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விழாவில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டோர் மேள வாத்திய சகிதம் மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாநகர ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் நாடாவெட்டி மண்டபத்தை திறந்து வைப்பதையும் காணலாம்.

படம்:கொனிகா கலர் லாப்.

# 'ஓம்' மின் அலங்காரம் கதிர்காமத்தில் நீக்கம்!

## ஜனாதிபதிக்கு முறைப்பாடு

கொழும்பு,ஓக.31

கதிர்காமம் முருகன் ஆலயத்தில் நீண்டகாலமாகப் பொருத்தப்பட்டிருந்த 'ஓம்' எழுத்துப் பொறிக்கப்பட்ட மின் அலங்காரம் அகற்றப்பட்டிருப்பதாக முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாகாண அமைச்சர் எஸ்.சச்சிதானந்தன் ஜனாதிபதிக்கு 'பக்ஸ்' மூலம் முறைப்பாடு செய்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இந்துக்களின் பாடல் பெற்ற தலங்களுள் கதிர்காமமும் ஒன்று. நீண்டகாலமாகவே இந்து மக்கள் கதிர்காமம் சென்று முருகனை தரிசித்து வருவது வழக்கம். முருக நாமத்தை உச்சரிக்கும் வகையில் 'ஓம்' இலச்சனையுடன் வேலும் பொறிக்கப்பட்ட சொருபம் ஆரம்பம் தொட்டே கதிர்காம ஆலயத்தின் முன்னால் மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டு தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது. ஆனால் அச் சொருபம் தற்போது இனந் தெரியாதவர்களால் அகற்றப்பட்டுள்ளது. இச்செயல் இந்து மக்களின் மனதை புண்படுத்தும் நடவடிக்கையாகும். இது சம்பந்தமாக இந்துக்களும், இந்து அமைப்புக்களும் என்னிடம் புகார் செய்துள்ளதோடு, கடுமையான கண்டனத்தையும் தெரிவித்துள்ளன.

ஆகவே தாங்கள் இது விடயத்தில் உடனடிக் கவனம் எடுத்து, கதிர்காம ஆலயத்திற்கு முன்னாலிருந்து அகற்றப்பட்ட 'ஓம்' இலச்சினையுடனான வேலுடன் கூடிய அலங்காரச் சொருபத்தை மீண்டும் முன்பிருந்ததுபோல அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவாய்க் கேட்டுக்கொள்கின்றேன் - இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ-6)

# விபத்தில் இளைஞன் மரணம்

யாழ்ப்பாணம்,ஓக.31

புத்தூர் - சங்கானை வீதியில் - ஈவினைப் பகுதியில் - நேற்று முற்பகல் இடம்பெற்ற மினிபஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் அவ்விடத்திலேயே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரான புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த கார்த்திகேசு சிவகுமார் (வயது 22) என்ற இளைஞரே இச்சம்பவத்தில்மரணமானவராவார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு, மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-15-139-173)

## ஜனாதிபதியுடன் யுத்தகளம் செல்ல தாதிமார் முடிவு

கொழும்பு,ஓக.31

யுத்தத்தை வெற்றிகொள்ள ஜனாதிபதி யுத்தகளம் செல்லத் தயாராக இருந்தால் அவருடன் இணைந்து 2 ஆயிரம் தாதிமாரும் யுத்தகளம் செல்லத் தயாராக உள்ளனர் என ஐக்கிய தாதிகள் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சங்கத்தின் மேலாளர், உறுப்பினர் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டு அது ஜனாதிபதிக்கு "பக்ஸ்" மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தேரர் தெரிவித்தார்.

பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி மகா சங்கத்தினருக்கு யுத்தகளம் செல்ல அழைப்பு விடுக்கிறார். ஆகவே இதற்குச் செவிசாய்த்து தமது சங்கம் மேற்கண்ட முடிவை எடுத்ததாக முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மேலும் கூறினார். (க-186)

## தேர்தல் பிரசுரங்கள்

பொதுத் தேர்தல் நெருங்குவதைத் தொடர்ந்து, வீதிகள் தோறும் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கும் நடவடிக்கையை கட்சிகள் ஆரம்பித்துள்ளன.

அத்துடன் -

தபால் மூலமாகத் தமது வெளியீடுகளை அனுப்புவதிலும் முக்கிய கட்சி ஒன்று ஈடுபட்டுள்ளது.(ஐ-27)

## இடமாற்றம்

இதுவரை மானிப்பாய் லோட்டன் வீதியில் செயற்பட்டு வந்த மானிப்பாய் தெற்கு(ஜே-139) கிராமசேவையாளரின் அலுவலகம் தற்போது மானிப்பாய் இந்துக்கல்லூரிக்குச் சமீபமாக உள்ள கட்டடத்தில் செயற்பட்டு வருகிறது. (ஐ-30)

# சமாதானத்துக்கு வாக்களியுங்கள்!

## ஆயர்கள் கூட்டாக வேண்டுகோள்

கொழும்பு,ஓகஸ்ட்31

**வரவிருக்கும் தேர்தலில் மக்கள் சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்கும் வாக்களிக்க வேண்டும்.**

**இவ்வாறு இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

**மூன்று தினங்கள் கொழும்பில் நடைபெற்ற ஆயர்களின் மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.**

·இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வொன்றினை எட்டுவதற்கு போரும் வன்முறையும் பயன்படப்போவதில்லை. உடனடியாக பகைமைகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் அதன்பின் சகல கட்சிகளின் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படவேண்டும் - என்று ஆயர்கள் கோரியுள்ளனர்.

ஆயர்களான ஒஸ்வால்ட் கோமிஸ், மல்கம்ரஞ்சித் ஆகியோரால் ஒப்பமிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், அரசியல் அதிகாரங்கள் போதியளவு பரவலாக்கப்பட்டும் - அதேவேளை இலங்கையின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் பாதுகாக்கப்பட உதவுவதுமான அரசியல் தீர்வு ஒன்றையே தாம் முன்வைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நடைமுறைகளில் தலையீடுகள் இல்லாதிருக்க வேண்டுமென்றும், மக்கள் தமது விருப்பத்தைச் சுதந்திரமாகத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டுமென்று ஆயர்களின் அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (ஐ-6-20)

# ஐ.தே.க. ஆட்சிக்கு வந்ததும் ஓரிரு மாதங்களில் ஜனாதிபதியைப் பதவியில் இருந்து நீக்கிவிடும்!

## அக்கட்சியின் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு,ஓக.31

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றி பதவிக்கு வந்ததும் ஓரிரு மாதங்களில் ஜனாதிபதியை அப்பதவியில் இருந்து தூக்கிவிடுவோம்.

இவ்வாறு ஐ.தே.கட்சிச் செயலாளர் காமினி அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழான 'லக்பிம வுக்த' அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இம்முறை நாம் வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது, கடந்த பொதுத் தேர்தலின் போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அளித்த வாக்குறுதிகளில் எதையும் நிறைவேற்றாத நிலையில் எமது வெற்றியை இலகுபடுத்தி இருக்கிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சி வேட்பாளரின் வெற்றி பொது மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சிக்காரர்களின் மோசடியால் பறிக்கப்பட்டிருந்தது. அந்தத் தேர்தல் நியாயமாக நடந்திருந்தால் நாம் நிச்சயமாக வெற்றி பெற்றிருப்போம்.

ஆனால் இம்முறை அவ்வாறான தேர்தல் மோசடிகளைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். சர்வதேச நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களிடமிருந்து கண்காணிப்பாளர்களைப் பெறவும் நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதற்குமேலதிகமாக ஒவ்வொரு தேர்தல் நிலையங்களிலும் ஐநூறு இளைஞர்களை ஈடுபடுத்தி மோசடிகளைத் தடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இம்முறை தேர்தலில் நாம் வாக்குறுதிகளுக்குப் பதிலாக கொள்கைத் தொடர் ஒன்றை எதிர்வரும் இரண்டாம் திகதி வெளியிடுவோம்.

ஐ.தே.கட்சி நாடாளுமன்றத்தில் நடந்து கொண்ட முறையை அடுத்தே புதிய அரசமைப்புச் சட்டநகல் தோற்கடிக்கப்பட்டது. வெளியிலிருந்து எவ்வளவுதான் கோஷம் எழுப்பியும் பயனில்லை. நாடாளுமன்றத்தில் எடுக்கப்படும் முடிவே நாட்டின் சட்டமாக இருக்கும். நாம் கை உயர்த்தி இருந்தால் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கும்.

எமது கட்சியைச் சேர்ந்த பல பிரமுகர்களை விலை கொடுத்து வாங்க அரசு உத்தேசித்திருந்த போதும் எமது உறுப்பினர்களின் நாட்டுப்பற்று அதனைத் தடுத்திருந்தது. இப் புதிய சட்டமூலம் வாபஸ் பெறப்பட்டதற்கு நாங்களே பிரதான சக்தியாக விளங்கி வந்துள்ளோம்.

தேர்தல் தொடர்பாக ஐ.தே.கட்சி நடத்திய கருத்துக் கணிப்பில் 115-முதல் 120 வரையான ஆசனங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு இருப்பது தெரிய வந்துள்ளது. தேர்தல் நடைபெறும் எல்லாப் பகுதிகளிலும் நாம் வேட்பாளர்களை நிறுத்துவோம். - என்று அத்துக்கோரள தெரிவித்தார். (க-20)

## பொதுத் தேர்தலுக்கு முன்

# துறைமுக அதிகார சபையில் 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு

இலங்கை துறைமுக அதிகார சபை 4 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்தி வருகிறது.

பொதுத் தேர்தலுக்கு முன் இந்த வேலை வாய்ப்பை வழங்குவதற்காக முறைகேடாக ஆள்சேர்ப்பு நடைபெறுவதாக கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகி உள்ளது.

அரசியல்வாதிகளின் குறுகிய நோக்கங்களுக்காக சட்டங்களை மீறி இந்த வேலை வாய்ப்புகள் வழங்கப்படுவதாகவும் -

தேவைக்கு அதிகமான ஊழியர்கள் துறைமுகத்தில் உள்ள போதிலும் தேர்தல் லாபம் கருதி மேலும் ஆள்சேர்ப்பு இடம்பெறுவதாகவும் -

தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டி உள்ளன. (ஐ-186)

# செய்திச் சாரம்

## பொலித்தீன் உறை வந்தது

யாழ்ப்பாணம்,ஓக.31

விசேட அடையாள அட்டைக்குப் பயன்படுத்தப்படும் இரண்டாயிரம் பொலித்தீன் உறைகள் கொழும்பிலிருந்து யாழ்.செயலக அடையாள அட்டைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொலித்தீன் உறைகள் இல்லாமையினால் கடந்த நான்கு மாதங்களாக விசேட அடையாள அட்டை வழங்கும் பணி தடைப்பட்டிருந்தது.

தற்பொழுது பொலித்தீன் உறைகள் கிடைக்கப் பெற்றுள்ளதால் மீண்டும் விசேட அடையாள அட்டைகள் விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.(ஐ-5-9)

## செயலகத்துக்கு பாதுகாப்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை அரசியல் கட்சிகள் தாக்கல் செய்து வருவதை அடுத்து யாழ்.செயலகத்துக்கு நேற்று முன்தினம் முதல் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

செயலகப் பகுதியில் கூடுதலான பொலீஸார் நிறுத்தப்பட்டு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ-5-9)

## பஸ் நிலையம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

சங்கானை பஸ் நிலையத்தைப் புனரமைக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பி. வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான என்.திரிலோகநாதன் தெரிவித்தார்.

தொல்புரம் பத்தானை வைரவர் ஆலயத்துக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் -

அந்த ஆலயத்துக்குச் செல்லும் பாதை புனரமைக்கப்பட்டுள்ளது என்றும் -

அவர் சொன்னார். (ஐ-3)

## பற்சிகிச்சை பாதிப்பு

நெல்லியடி,ஓக.31

மந்திகை மருத்துவமனையில் உள்ள பற்சிகிச்சைப் பிரிவில் பல் சுத்தப்படுத்தும் 'ஸ்கெலர்' (Scaler) இயந்திரம் கடந்த மூன்று மாத காலமாகப் பழுதடைந்திருப்பதனால், நோயாளிகளுக்கு பல்சுத்தம் செய்யும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

இங்கு தினமும் 80க்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்ற போதிலும், இந்த இயந்திரம் பழுதடைந்திருப்பதனால் பல் சுத்தம் செய்யமுடியவில்லை என்று பல் வைத்தியர் வி.ஜெயராஜா தெரிவித்தார். (ஐ-109)

## கும்பாபிஷேகம்

புலோலி மேற்கு மருதந்தெணி அருள்மிகு மகாமாரி அம்பிகை ஆலயத்தில் விநாயகர், சுப்பிரமணியர் சுவாமிகளின் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கும் 7 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது. (ஐ-173)

## பெருமாள் அணி உறுப்பினரைக் கடத்த முயற்சி

வவுனியா,ஓக.31

வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எவ். பெருமாள் அணி உறுப்பினர் ஒருவரை தமிழ் அமைப்பு ஒன்றைச் சேர்ந்தோர் கடத்திச் செல்ல முயன்றதாகப் பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பெருமாள் அணியைச் சேர்ந்த கணபதி கதிரவேலு (வயது28) என்பவர் வவுனியா பூந்தோட்டம் ஸ்ரீ நகர் அகதி முகாமில் கடந்த திங்கட்கிழமை காலை உதவி செய்து கொண்டிருந்தபோது அங்கு 'டொல்பின்' ரக வானொன்றில் வந்திறங்கிய தமிழ் அமைப்பு ஒன்றினைச் சேர்ந்தோர் அவரைக் கடத்திச் செல்ல முற்பட்டனர் எனவும் -

இவர் அங்கிருந்து தப்பிச் சென்று வெளிக்குளம் முகாம் பொலீஸ் நிலையத்தில் இந்தச் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்ததுடன் தன்னைக் கடத்த முயன்ற தமிழ் அமைப்புக் குறித்தும் முறையிட்டுள்ளார் எனவும்

தெரியவருகிறது.

இது குறித்து பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசநாயகம் மகேஸ்வரி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசநாயகம் மகேஸ்வரி நேற்று (30—08—2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சற்குணம், முத்துப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சினியர் அப்பையா - சொர்ணம்மா தம்பதிகளின் மருமகளும், மயூரநாதன் (கொழும்பு), ஜெயலக்ஷ்மி (கொழும்பு), சற்குருநாதன் (கொழும்பு) சிவகுருநாதன் (ஐங்கரன் அரிசி ஆலை—இணுவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பற்குணன் (இளைப்பாறிய பொறியியலாளர்—கொழும்பு). தயாவதி, பாமா, செந்தில்மதி ஆகியோரின் அன்பு மாமியும், செல்வநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற மகாதேவன், நடராசா, சிவநேசம், காலஞ்சென்ற பரமேஸ்வரி, கமலாதேவி, அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அ. செல்வநாயகத்தின் (கணேசன் அரிசி ஆலை) அன்பு மைத்துனியும் பிரபாலினி, தினேஸ்குமார், கஜந்த், மாதுலன், சிந்தூரன், சிவமதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (31—08—2000) இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
இ. சிவகுருநாதன்
(மகன்).

இணுவில். (77851)

## திருமதி கணபதிப்பிள்ளை அன்னலட்சுமிப்பிள்ளை

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம், ஊரதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி கணபதிப்பிள்ளை அன்னலட்சுமிப்பிள்ளை 28—08—2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை—இளையபிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும், கந்தையா—இராமாசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், புஸ்பவதி (மோதர, கொழும்பு), குணபாலசிங்கம் (சுவிஸ்), குகனேசன் (கனடா), புஸ்பகாந்தி (கிளிநொச்சி), குகதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்ற பரமலிங்கம் (ஞானம் மில், கிளிநொச்சி) மற்றும் சிவலிங்கம் (C.O புங்குடுதீவு) ஆகியோரின் மாமியாரும், நவரத்தினம் (நவமணி ஸ்ரோர்ஸ் மடத்துவெளி, புங்குடுதீவு), பரமேஸ்வரி (அராலி), சற்குணம் (அவிசாவளை), இராசம்மா (புத்துவெட்டுவான், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பு வத்தளையில் இன்று (31—08 - 2000) நடைபெறும்.

தகவல்:
த நவரத்தினம்
(சகோதரன்)

நவமணி ஸ்ரோர்ஸ்,
மடத்துவெளி,
புங்குடுதீவு. (77834)

## S, R. அரியரத்தினம்

(ஓய்வு பெற்ற அதிபர் யா/சிதம்பராக் கல்லூரி)

S. R. அரியரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (29 - 08 - 2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வபூமணியின் அன்புக் கணவரும், மகேந்திரா, காலஞ்சென்ற ஜெயேந்திரராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோன்மணியின் மாமனாரும், செல்வரூபன், செல்வறஜனி, சதானந்தன், செல்வகரன், செல்வரதி ஆகியோரின் பாசமிகு பேரனும் சங்கீதாவின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30- 08- 2000) புதன்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மகேந்திரா
(மகன்)

பதிவாளர் ஒழுங்கை,
உடுப்பிட்டி. (77860)

## கார்த்திகேசு சிவகுமார் (சிவா)

மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு சிவகுமார் நேற்று (30-08-2000) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் கார்த்திகேசு அன்னரத்தினத்தின் அன்பு மகனும், சிவநேசசெல்வி, சிவாஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் முருகானந்தத்தின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-8-2000) வியாழக்கிழமை பி.ப2.00 மணியளவில் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க. கார்த்திகேசு
(தகப்பன்)

தற்போதைய முகவரி
ஈவினை வடக்கு:
நாகதம்பிரான் கோயிலடி,
புன்னாலைக்கட்டுவன். (77866)

## 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக. 31

இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்குப் பகுதியில் ஜே—180, ஜே — 179, ஜே — 181 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தங்கியிருக்கும் சாவகச்சேரி, பளை மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தோருக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இன்று வியாழக்கிழமை வலி.மேற்கு பிரதேச செயலர் அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளது. (க-29)

## மாணவர்களுக்கு அ. அட்டை

கச்சாய் அ. த. க பாடசாலையில் இருந்து தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில்ஒரு தொகுதியினரின் அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அ. அட்டைக்கு விண்ணப்பித்த மாணவர்களை இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் கல்வி வலயத்துக்கு சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (க)

## ஆலயங்களில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 31

அச்சுவேலி பத்தமேனி ஸ்ரீ சங்கிலி வைரவர் ஆலய பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிமுதல் 7 மணி வரையான வேளையில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (க)

★ ★ ★

கொழும்புத்துறை' ஓக 31

வட்டுக்கோட்டை மேற்கு பிங்கள மோதக மாமரப்பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட சங்காபிஷேகம், பூசை மற்றும் ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

பிற்பகல் 6.30 மணிக்கு சுவாமி வீதி வலம் வருவார். (க-30)

★ ★ ★

வடமராட்சி, ஓக. 31

தென்புலோலி காந்தியூர் வற்றாப்பளை அருள்மிகு கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இச்சங்காபிஷேகத்தை கேதகஞானபானு சிவஸ்ரீ ந. சாதீஸ்வரக் குருக்கள் நடத்தி வைப்பார். (ஐ-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ்ப்பாணம் — அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில்ஆவணி மாத விநாயகர்சதுர்த்தி விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இதேவேளை — இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆலயக் குருக்களின் உபயமாக நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் இடம்பெறும். (க-15)

★ ★ ★

உரும்பிராய், ஓக. 31

உரும்பிராய் ஸ்ரீகாமாட்சி அம்பாளின் கிராமப்பிரவேசம் இன்று வியாழக்கிழமை மாலை நடைபெறும்.

அலங்கார உற்சவத்தின் நிறைவு நிகழ்வாக இது இடம்பெறவுள்ளது. (க-154)

# வேலணை பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபைத் தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு வே. பி. சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 31-08-2000 — 06-09-2000 மதியம் 12.30 மணி வரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 11-09-2000 காலை 11.00 மணி வரை.
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி 11-09-2000 மதியம் 12.30 மணி. (அச்சமயத்தில் கேள்வி சமர்ப்பிப்போரும் சமுகமளிக்கலாம்)
4. கேள்விகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு உரிமையுண்டு.
5. கேள்வி மூலப்பிரதியைத் தலைவர், பிரதேச சபை, வேலணை என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் செட்டித் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் எதிர்வரும் 11-09-2000 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
6. மீளளிக்கப்படக்கூடிய ஒப்பந்த வைப்புப் பணமாக ஒப்பந்தத் தொகையில் 5வீதம் வைப்பில் இடப்பட வேண்டும்.
7. சபையால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
8. இது சம்பந்தமாக மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல. | வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | திறந்த வெளி அரங்கு மீளமைத்தல் வேலணை. | 2000 00 | 500 00 |
| 02. | யாத்திரிகர் மடம் திருத்தியமைத்தல் நயினாதீவு. | 2000 00 | 500 00 |
| 03: | உப அலுவலகம் திருத்தியமைத்தல் புங்குடுதீவு. | 1800 00 | 350 00 |
| 04 | ஐயனார் சனசமூக நிலையம் திருத்தியமைத்தல் வேலணை. | 700 00 | 100 00 |
| 05. | நசரத் சனசமூக நிலையம் திருத்தியமைத்தல் புங்குடுதீவு. | 250 00 | 100 00 |
| 06. | சுடலை மடம் திருத்தியமைத்தல் நயினாதீவு. | 700 00 | 100 00 |
| 07. | அந்தியேட்டி மடம் திருத்தியமைத்தல் நயினாதீவு. | 1350 00 | 300 00 |
| 08. | சித்திவிநாயகர் சனசமூக நிலையம் அமைத்தல் புங்குடுதீவு. | 1350 00 | 300 00 |
| 09. | சுடலை மடம் அமைத்தல், புங்குடுதீவு. | 1350 00 | 300 00 |
| 10. | ஐக்கிய உதயமகால் சனசமூக நிலையம் திருத்தம் இரண்டாம் பகுதி, வேலணை. | 500 00 | 100 00 |
| 11. | சாட்டி பொது மலசலகூடம் அமைத்தல் வேலணை. | 1800 00 | 350 00 |
| 12. | நாச்சிமார் பொதுக் கிணறு திருத்தியமைத்தல் வேலணை | 250 00 | 100 00 |
| 13. | சிறி முருகன் சனசமூக நிலைய தளபாடம் வழங்கல் வேலணை. | 250 00 | 100 00 |
| 14. | ஆலம் புலம் வீதி திருத்தியமைத்தல் நயினாதீவு. | 2200 00 | 500 00 |
| 15. | நீர் விநியோக வீதி திருத்தியமைத்தல் வேலணை. | 2200 00 | 500 00 |
| 16. | சிற்பனை வீதி திருத்தியமைத்தல் இரண்டாம் பகுதி வேலணை. | 2200 00 | 500 00 |
| 17. | அல்லைப்பிட்டி கடற்கரை வீதி திருத்தியமைத்தல். | 2000 00 | 500 00 |
| 18. | அம்மன் வீதி திருத்தியமைத்தல் வேலணை. | 2000 00 | 500 00 |
| 19. | வைரவர் வீதி திருத்தியமைத்தல் வேலணை. | 1500 00 | 350 00 |

திருமதி பு. சிவலிங்கம்.
செயலாளர்,
வேலணை பிரதேச சபை.

திரு. ந. கருணாகரகுருமூர்த்தி
(ஜே.பி.யு.எம்.)
தலைவர்,
வேலணை பிரதேச சபை.

(சி/12766)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

வட்டு.மேற்கு,வட்டுக்கோட்டை (பிளவத்தை) எனும் இடத்தைச் சேர்ந்த கயிலாயநாதன் திருக்குமார் என்பவருடைய தே.அ.அ. (இல. 782623524v), விசேட.அ. அட்டை (0904020704) என்பன நவாலிக்கும வட்டுக்கோட்டைக்கும் இடையில் (28-08-2000) தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் அல்லது தகவல் அறிந்தவர்கள் மனிதாபிமான அடிப்படையில் மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (77821)

கைதடி, நாவற்குழி தெற்கு, கைதடி, சாவகச்சேரி எனும் முகவரியுடைய பிள்ளைநாயகம் டுயந்தினி என்பவருடைய தேசிய அ.அ. (இல. 817682979v), விசேட அ.அ. (இல. 091032289),பாடசாலை அ.அ. (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்) என்பன நல்லூர் ஆலயத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திருநெல்வேலி சிவன்கோவில் தேவஸ்தானத்தில் சதாசிவக்குருக்களிடம் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (77811)

அச்செழு, நீர்வேலி எனும் முகவரியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் கணேஸ்வரன் என்பவரது தேசிய அ.அ.(இல.740901168v)யும், விசேட அ.அ. (இல. 0903005561), தொழில் அ.அ. (மின்சாரசபை) என்பன 28-08-2000 யாழ். பஸ்நிலையத்துக்கும், பிறவுண் வீதி மின்சார அலுவலகத்துக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இலங்கை மின்சார சபை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77820)

பாரதி வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த தயாளினி இராசையா என்பவரது தேசிய அ.அ. (806492507v), விசேட அ.அ. (0902007868) மற்றும் தயாநிதி இராசையா என்பவரது தேசிய அ.அ., விசேட அ.அ. (இல. 0902025924) மற்றும் யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலய பாடசாலை அடையாளஅட்டை என்பன கொக்குவிலுக்கும், திருநெல்வேலிக்கும் இடையில் 27-08-2000 அன்று தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77830)

இராசையா சுபராஸ்வரன் என்பவரது குளமங்கால், மல்லாகம் முகவரி கொண்ட தேசிய அ.அ. (இல. 701952073v)யும், இராமநாதன்வீதி, நாயன்மார்கட்டு எனும் முகவரி கொண்ட விசேட அ.அ.(இல.0902004529)யும் ஆனைப்பந்திச் சந்திக்கும், கைலாயபிள்ளையார் கோயிலடிக்கும் இடையில் 29-08-2000 அன்று I.C கவருடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள தயவு செய்து அர்ச்சுனா றபர் ஸ்ராம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (77831)

## இலக்கியக் கட்டுரைகள்

சிறுகதை, நாவல், நாடகம், இலக்கிய விமர்சனம் என்ற நான்கு பிரிவுகளில் அமைந்த 38 கட்டுரைகள் கொண்ட நூல், க.பொ.த. மாணவர்கள் தமிழ் மொழி கற்க உதவும். அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதியது. ரூபா 125.00 (77740)

## கைவரைப் பலன்

விஞ்ஞான முறைப்படி நன்கு ஆராய்ந்து பலன் கூறப்படும். முற்பகல் 8.30-11.00, பிற்பகல் 2.30-5.00 தொடர்பு: 7, ஐயனார் கோயில் தெரு, வண்ணார்பண்ணை. (77832)

## பொய்யாமொழி ஜோதிடம்

கல்வி, விவாகம், தொழில், வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றில் உள்ள தடைகள் விலக ஆலோசனைகள் வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சனி, செவ்வாய் 140, பருத்தித்துறைவீதி, நல்லூர் (வீரமாகாளி அம்மன் கோயிலடி), ஞாயிறு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (77824)

## இறைச்சிக் கோழிகள் தேவை

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். உடன் தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (77819)

## தவறிவிட்டது

வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை எனும் முகவரியுடைய சிவசுப்பிரமணியம் இராதாமணி என்பவருடைய தேசிய அ.அ. (இல. 456351387v) சங்கானைக்கும் சித்தன்கேணிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (77836)

திருமதி நித்தியானந்தன் இந்திராணி என்பவரது கண்டி வீதி, கைதடி எனும் முகவரி கொண்ட தேசிய அ.அட்டையும், கைதடி தெற்கு, கைதடி எனும் முகவரி கொண்ட விசேட அ.அட்டையும் மருதனார்மடத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் (26-08-2000) அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சுன்னாகம் தபாற்கந்தோரில் ஒப்படைத்து உதவவும். (77818)

## விற்பனைக்கு

SONY 2030 T.V., SONY டெக், ஜெனரேற்றர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி.சி.த.க. பாடசாலைமுகாம், கே.கே.எஸ். வீதி, குளப்பிட்டி றோட், கொக்குவில் மேற்கு. (77813)

## O/L ஆங்கிலம்

2000 ஆண்டு பரீட்சையில் தோற்றுபவர்களுக்கான துரித ஆங்கில வகுப்பு புதன் மாலை 5 மணிக்கும், வெள்ளி காலை 6 மணிக்கும் நடைபெறும். K. சோமசுந்தரம், சந்தைகிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (77846)

## வாடகைக்கு

43, பலாலி வீதியில் (கந்தர்மடம்) கடை வாடகைக்குவிடப்படும். விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும். 43, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (77815)

## ADVANCED ENGLISH

A/L, பல்கலைக்கழக அனுமதி பெற்றோர், ஆசிரியர், உத்தியோகத்தர்களுக்கான ஆங்கிலவகுப்பு திங்கள், புதன் காலை 6 மணிக்கு நடைபெறும். K. சோமசுந்தரம், சந்தைகிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (77847)

# புதிய படகு இறங்குதுறை ஊர்காவற்றுறையில் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஒக.31

ஊர்காவற்றுறை கரம்பன் கண்ணகி அம்மன் ஆலய கடற்கரையில் புதிய இறங்குதுறை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

அண்மைக்காலங்களில் குடாநாட்டில் யுத்தம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய இறங்குதுறைகளில் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஏனைய தீவக மக்கள் படகுகளில் வந்து இறங்க படையினர் அனுமதி மறுத்து வந்தனர்.

ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அரசிற்கு விடுத்த கோரிக்கையை அடுத்து வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபையின் நிதியில் இருந்து ஐம்பது லட்சம் ரூபா செலவில் இந்த இறங்குதுறை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

புதிய இறங்குதுறையினை தீவக மக்கள் பயன்படுத்தினால் அவர்களது கடற்பயண நேரம் குறைக்கப்படும். அத்துடன் அவர்கள் எதிர்கொண்டு வந்த போக்குவரத்து சிரமங்களும் நீங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

# ஐ.தே.க ஆதரவாளர் வீடு மீது தாக்குதல்

ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளரொருவரின் வீடு திங்கட்கிழமை இரவு இலக்கத்தகடு அற்ற வாகனமொன்றிலவந்த குழுவினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாகப் புத்தளம் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தளம 2 ஆம்கட்டைப் பகுதியிலுள்ள தில்லையடியிலேயே சம்பவம் நடைபெற்றுள்ளது. வீட்டிலிருந்த ஐ.தே.க. ஆதரவாளரான எம். பில்டன் என்பவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். வீட்டின் முன் பகுதியிலேயே துப்பாக்கி நபர்கள் சுட்டுவிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6-8)

# புத்தூரில் காயமடைந்த சிறுமி மரணம்

யாழ்ப்பாணம்,ஒக.31

புத்தூர் கிழக்கு, வாதரவத்தைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஷெல் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்து, ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறுமி இருநாள்களின் பின் நேற்று முன் தினம் இரவு அங்கு மரணமானார்.

செல்வராசா பாமினி (வயது 12) என்ற சிறுமியே இச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

இவர் இறக்கும் வரை சுயநினைவிழந்த நிலையிலேயே சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்தார்.(ஐ-15)

# பாலம் திருத்தவேலை

கொழும்புத்துறை,ஒக.31

யாழ். பிரதான வீதியில் - ஓடக்கரை வீதிச் சந்தியில் உள்ள-பிரதான பாலத்தின் திருத்த வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது காலவரை இப்பாலம் தூர்ந்து போய் இருந்ததால் இதிலிருந்து செல்லும் வாய்க்காலில் தண்ணீர் கடலுக்குச் செல்ல முடியாது தேங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-30)

உ

சிவமயம்

# பொன்விழாக் காணும் தம்பதிகள்



சிவாச்சார்யமணி

**சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக் குருக்கள்**

**யோ. சுபதாம்பிகை அம்மா தம்பதிகள்**

**(31-08-2000)**

இல்லற வாழ்வில் இன்பமுடன் இணைந்து
இன்றைய நன்னாளில் பொன்விழாக் காணும்
எம் இனிய தாய் தந்தையினரை வாழ்த்தி
வணங்குவதுடன் அவர்களின் ஆசியை
வேண்டி நிற்கின்றோம்.

எம் அன்புத் தெய்வங்கள் மேலும் நீடூழிகாலம்
வாழ்ந்து எம்மை வழிநடத்த வேண்டும் என
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மேற்படி பொன்விழா நிகழ்வை முன்னிட்டு அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயர் ஆலயத்தில் நவோத்திர சகஸ்ர (1008) சங்காபிஷேகம் காலை 9 மணியளவில் இடம்பெறும்.

*41, புதுவீதி,*
*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.*

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(77495)

உ

**வட்டுக்கோட்டை துணைவி அரசடிப்பிள்ளையார் கோயில்**

# வருடாந்த அலங்கார உற்சவம்

**01.09.2000 விநாயக சதுர்த்தி திருவிழா** முற்பகல் 10 மணி
**03.09.2000 முதலாம் திருவிழா** முற்பகல் 9 மணி
**04.09.2000 - 12.09.2000 2-10 ஆம் திருவிழாக்கள்** பிற்பகல் 2 மணி

மேற்படி உற்சவங்களில் கலந்து கொண்டு விநாயகப் பெருமானைத் தரிசித்து நல்லருளைப் பெறுமாறும் உலக சமாதானத்திற்காகப் பிரார்த்திக்குமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(77632)

**- பரிபாலனசபை**

# மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா

மல்லிகா

# மல்லிகா மிக்ஷர் மாளிகை

காலம்: நாளை **2000-09-01** ஆம் திகதி வெள்ளிக்கிழமை

எங்களிடம் மல்லிகா தொழிலகத் தயாரிப்புக்களையும், பவானி விலாஸ் கச்சான் அலுவா, லீலா (சங்கானை) வெதுப்பக பிஸ்கற் வகைகளையும், சண்பிராண்ட் (அளவெட்டி) இனிப்பு ரொபி வகைகளையும், மல்லிகா பண்ணை முட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள வைபவங்களான பிறந்தநாள் கொண்டாட்டம், பூப்புனித நீராட்டு விழாக்கள், திருமண வைபவங்கள் மற்றும் பாடசாலை, காரியாலய, களியாட்டு விழாக்களுக்கு உங்கள் விருந்தினரை அன்போடு வரவேற்று, நிறைவோடு உபசரித்து விருந்தோம்பி, கொண்டாட்டம் குதூகலிக்க, தரம் நாடுவோர் தவறாது நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:

*மல்லிகா மிக்ஷர் தொழிலகம்*

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

*நீங்கள் ஒரு முறை எம்மிடம் வருகை தந்தால், மீண்டும், மீண்டும்*
*சுத்திச் சுத்தி வந்திடச் செய்யும்!*
*கேட்டுக் கேட்டு வாங்கிடச் செய்யும்!!*
*சாப்பிடச், சாப்பிடச், சாப்பிடச் சொல்லும்!!!*

**மல்லிகா மிக்ஷர், பகோடா, முறுக்கு, தட்டுவடை**

இல. 151, மின்சார நிலைய வீதி, (பஸ்நிலையத்துக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (77833)

# தொடர்புகொள்ளக் கோரிக்கை

காணாமற்போன அரச உள்ளூராட்சி திணைக்கள ஊழியர்களின் நிலுவைச் சம்பளம் கிடைக்காதவர்களின் குடும்பங்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரையும் நிலுவைச் சம்பளம் கிடைக்காத காணாமற்போனவர்களின் குடும்பத்தினரை இன்று காலை 9மணிக்கு உரிய ஆவணங்களுடன் வடபகுதி காணாமற்போனோர் கைது செய்யப்பட்டோர் பாதுகாவலர் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-5)


## பதவி வெற்றிடம்

### கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்

**தகைமைகள்:-**

1. ஜி.சீ.ஈ சாதாரணதரப்பரீட்சையில் தமிழ்மொழி, கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி.
2. வயது 30 முதல் 55 வரை.
3. உயரம் 5 அடி 4 அங்குலத்துக்குக் குறையாமலும் நல்ல திடகாத்திரமாகவும் இருக்க வேண்டும்.

* ஓய்வுபெற்ற அரச படை சேவையாளர்கள் (EX - SERVICE MEN)

பாதுகாப்புச் சேவையில் முன் அநுபவமுள்ளோர் ஆகியோருக்கு வயதெல்லை கட்டுப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படும்.

** கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு இன்று 31-08-2000 பி.ப 2.30 மணிக்கு நேரில் வரவும்.*

**GOLDEN EAGLE SECURITY SERVICE,**

**347, KASTHURIAR ROAD, (TOP FLOOR) JAFFNA.**

(c/12756)



உ

*ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருந்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்*

## மணவாளக் கோல விழா விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் விக்கிரம வருஷம் ஆவணித் திங்கள் 16ஆம் நாள் (01-09-2000) வெள்ளிக்கிழமை அம்பாளுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகம், விசேட தீபாராதனை, மகேஸ்வர பூசை (அன்னதானம்) ஆகியன நடைபெற்று அம்பாள் அழகிய பூந்தண்டிகையில் வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும்.

அத்தருணம் அடியார்கள் யாபேரும் வருகை தந்து அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்

மணவாளக் கோல உற்சவ உபயகாரர்

**தாமோதரம்பிள்ளை இராசேந்திரம்** (N.T.R.)

புளியங்கூடல்.

(77861)



## பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம் (வ.து)

### புதிய அசோக் லைடன் பாரவூர்திக்கு உடற் கோப்பு அமைப்பதற்கான கேள்வி கோரல்

புதிய அசோக் லைடன் பாரவூர்திக்கு உடற்கோப்பு அமைபதற்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய கேள்வி கோரப்படுகின்றது. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் **04-09-2000**ஆம் திகதி திங்கட் கிழமை மு.ப. 10.30 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ கிடைக்கக்கூடியதாக 'பாரவூர்தி உடற் கோப்பு அமைத்தல்' என கடித உறையின் இடது புற மேற்பக்கத்தில் எழுதி 'தலைவர், கேள்விச் சபை பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம் நவாலி றோட், ஆனைக்கோட்டை' என முகவரியிட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்வி விண்ணப்பங்களை ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

நிபந்தனைகள்

1. உடற்கோப்பு அமைத்தலுக்கான அடிச்சட்டம் நீட்டுதல்.
2. உடற்கோப்பிற்கான ரிங்கர் வேலை.
3. தேவையான இரும்பு வேலைகள்.
4. பெயின்ற் வேலைகள்
5. மின் இணைப்பு பொருத்துதல்
6. பெயர் எழுதுதல்.
7. தேக்கு, பலா, வாகை, சமண்டலை, நாவல் போன்ற மரவகைகளைப் பாவித்தல் வேண்டும்.
8. வேலைகள் யாவும் ஒருமாத காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
9. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தாமாகவே சுயமாகத் தயாரித்து அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படின் நவாலி றோட், ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள எமது சங்க தலைமைச் செயலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

*பொதுமுகாமையாளர்*
*பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்*
*நவாலி றோட்,*
*ஆனைக்கோட்டை.*

31-08-2000 (c/12765)


## தடை உத்தரவு நீடிப்பு

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பொதுச் செயலாளராக சுரேஷ்பிரேமச்சந்திரன் தொடர்ந்து இயங்குவதற்கும், கட்சியின் நிறைவேற்றுக் குழுவின் நடவடிக்கைகளுக்கும் விதிக்கப்பட்டிருக்கும் இடைக்காலத் தடையை கொழும்பு மாவட்ட, மாவட்ட நீதிமன்றம் அடுத்த மாதம் 12ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

கட்சி உறுப்பினர்களான சுபத்திரன், ஆர்.சிறீரட்ணம், பி.ஶ்ரீதரன், என். நேசராசா, பி.சிவராசா ஆகியோர் தாக்கல் செய்த மனுவின் பிரகாரமே இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-8)

## நெடுந்தீவுக்கு தே.அ.அட்டை

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஊடாக கடந்த ஏப்ரல் மாதம் தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்த ஒரு தொகுதியினர்களுக்கான அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன. அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் தமது கிராமஅலுவலருடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.(இ-க-7)

## நிவாரணம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள யா/102 கிராம சேவையாளர் அலுவலகத்தில் இன்று காலை 9.30 மணிமுதல் இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு அல்லாத பொருள்கள் வழங்கப்படவுள்ளன. தென்மராட்சி, யாழ்ப்பாணம் (61,63), நல்லூர் (91,96), ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து யா/102 கிராம சேவையாளர் பிரிவில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் இந்தப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (இ-5)

## பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இக்கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதான சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறுமென சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். (க)


EESAN INSTITUTE
K.K.S.ROAD
KONDAVIL

ENGLISH
SPOKEN AND GRAMMAR

Mr.JEYAKUMAR
02-09-2K (sat)
SAT., SUN.:- 7.00 A.M.
TUE., THU. :- 6.15 A.M

(77862)



தூரிகை நுண்கலை வளாகம்
நெல்லியடி

**புதிய வகுப்புக்கள்**

★ உடையமைத்தல்
★ கேக் ஐசிங்
★ Hair Style
★ பூவேலைப் பயிற்சி
★ Fabric Painting

01.09.2000 (வெள்ளி)
மாலை 3.30 மணிக்கு
ஆரம்பமாகின்றன.

★ சான்றிதழுடன் கூடிய மேற்படி பயிற்சிகளில், தனி ஒரு பயிற்சியிலும் கலந்து கொள்ளலாம். (c/12761)



**தேவை**

மனையியல் பாடநெறிகளுக்குரிய போதனாசிரியரும், நிர்வாக உதவியாளரும் தேவை. 02-09-2000 (சனி) காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

இயக்குநர்
'தூரிகை'
செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.

(C/12760)


# வீதிகளுக்குக் குறுக்கே கூட்டம் நடத்தத் தடை

தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் அனைத்தும் ஒரேவிதமாக - பாகுபாடின்றி - பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். பிரான வீதிகளுக்குக் குறுக்கே கூட்டங்களை நடத்த அனுமதி வழங்கக்கூடாது என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளுக்கு பொலீஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

பொலீஸ் தலைமையகத்தில் நடைபெற்று சகல மாவட்டங்களையும் சேர்ந்த சிரேஷ்ட பொலீஸ் பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டத்திலேயே பொலீஸ்மா அதிபர் இந்த உத்தரவை விடுத்தார். (ஐ-6-20-186)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணுக்கு | விண்ணுக்கு |
|---|---|
| 1960 - 11 - 21 | 2000 - 08 - 01 |



அமரர்

### செல்லத்துரை பாலகிருஷ்ணன்

**(பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற ஊழியர்)**

வல்லிபுர நாரணன் நம்பியை வலம் வந்து அல்லும் பகலும் நம்பியே நின்றோம் நாம். எழுதிச்சென்றதுவோ விதியின் கை; அழுதால் தீருமோ நம் அவலம்; அனலிடைப் புழுபோல் அவனியில் நாம் தொழுது வணங்கி நிற்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைந்திடவே!

*வடலித்தோட்டம், தம்பசிட்டி, பருத்தித்துறை.*

*மனைவி, மகள், மகன், உறவினர்கள்.*

(C/12759)



## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1923 - 07 - 07 | 2000 - 08 - 16 |



### திருமதி கந்தையா சாரதாம்பாள்

இன்று (31-08-2000) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் மீளாத்துயில் கொண்ட நாள் தொடக்கம் இன்றுவரை வேண்டிய உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தபால் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மேலும் அனைத்து உதவிகளும் புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எம் இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேகலை ரமேசும்
ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை - கோப்பாய்,
உறவினர்களும்.

*வேலணை, முதலாம் வட்டாரம்.*

(77859)



உ

'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ'

## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி குமரையா சரஸ்வதி (சரசாச்சி)

*உதிர்வு: 12-08-2000*

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த திருமதி குமரையா சரஸ்வதி அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியை நாளை (01-09-2000) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதால், அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தற்போதய முகவரி:*
*12, B.S. வீதி,*
*சோனக தெரு,*
*யாழ்ப்பாணம்.*

(77863)

சு.கந்தசாமி (ஆசிரியர்)
குடும்பத்தினர்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

## NEW SCIENCE COLLEGE
(யாழ்ப்பாணம்)

### இணைந்த கணிதம்

**2001 A/L** — மொத்தல் மூட்டிய கோல்கள்
**2002 A/L** — காவிகள் பொதுத்தீர்வு

*ஆரம்பம்: 02-09-2000*
*(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)*
**க.பத்மநாதன்**
(77855)



இதோ!
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
மீண்டும் ஆனைப்பந்தியில்

**SPOKEN ENGLISH**
**With**
**GRAMMAR**
**LECTURES BY:**
***Mr. M.A.HARI***

*புதிய பிரிவு ஆரம்பம்: 04-09-2000*
*திங்கள் மாலை 3.00 மணி*

Monday / Wednesday } 3 p.m. - 4 p.m.

☛ அனுமதிக்கு முந்துங்கள். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

*நாவலர் கல்வி நிலையம்*
**ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.** (77858)



புதிய கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பம் 02/09/2000 பகல் 10.00 மணி

கிளை நிறுவனங்கள் :
* IIS நெல்லியடி, கரவெட்டி.
* IIS பிரதான வீதி, சங்கானை.

## Institute of Informatics Studies (IIS)
No. 100 Clock Tower Road, Jaffna.
(Affiliated with *IMIS*, UK)
Telephone No. : 21-2831 E-Mail : iis@sltnet.lk

### Degree Course
Bachelor of Information Technology (BIT)
Conducted by University of Colombo.

### Diploma Courses
* Advanced Diploma in Applied Computer Science
* Diploma in Software Engineering
* Diploma in Computer Programming
* Diploma in Personal Computer Specialist
* Technician Diploma in Computer Hardware
* Diploma in Microsoft Office 2000
* Diploma in Internet & E-Mail Communication

### Professional Courses
* BCS Stage I & Stage II Conducted by British Computer Society, U.K.
* ACS Stage I to Stage IV Conducted by Australian Computer Society, Australia.
* NECS Stage I to Stage VI Conducted by National Examination in Computer Studies, Sri Lanka.
* NCCA 1- Basic Level Exam and 2- Intermediate Level Exam Conducted by National Certificate in Computer Application Sri Lanka.

### Certificate Courses
MS Excel 2000, MS Word 2000, MS Access 2000, MS Power Point 2000, AutoCad, Page Maker, Corel DRAW, Visual Basic, Pascal, Visual C, C++, dBase III+ and Computer Hardware.

ஆயிரம் ஆயிரம் மாணவர்களின்
நம்பிக்கைக்குப் பாத்திரமான கல்வி நிறுவனம்

* எமது புலமைப்பரிசில் திட்டம் 2000இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இறுதிப்பிரிவு இதுவேயாகும். எனவே இதுவரை தம்மைப் பதிவு செய்யாத மாணவர்கள் விரைவில் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

* எமது நிறுவனத்தின் பழைய மாணவர்கள் அல்லது அவர்களின் உடன்பிறப்புக்களுக்கு கட்டணத்தில் விசேட சலுகை வழங்கப்படும்.

**உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான எமது மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2001 விரைவில்**


## அரசு - முஸ்லிம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் 22 மாவட்டங்களிலும் நாம் தனித்து போட்டியிடுவதற்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வோம்" - என்று - அஷ்ரப் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

அஷ்ரப் நேற்றுக் கூறியதாவது:-

முஸ்லிம் காங்கிரஸ்"க்குள் பிளவு இல்லை; பிணக்கு இல்லை. அப்படி இருப்பதாகக் கூறுவது பொய்ப்பிரசாரம்.

பன்னிரண்டு வருடங்களாகச் செயற்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் என்ற தாயிலிருந்து இன்று தேசிய ஐக்கிய முன்னணி என்ற மகன் பிறந்திருக்கின்றான். முஸ்லிம் காங்கிரஸின் மகுடத்தை தேசிய ஐக்கிய முன்னணி இப்போது சூடிக் கொள்கின்றது.

ஜனாதிபதி எடுத்த சமாதான முயற்சிகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் முழு ஒத்துழைப்பு நல்கி வந்தது. இந்த ஒற்றுமையைக் குலைக்கும் சக்தியாக விளங்கியவர் அமைச்சர் பௌசியே. இந்தப் பொதுத்தேர்தலுடன் பௌசி அரசியலைத் துறக்கவேண்டி நேரிடும். அவர் தொடர்பாக நாம் கிளப்பியிருக்கும் பிரச்சினைகளுக்கு இன்று மாலைக்குள் ஜனாதிபதி ஒரு தீர்வு காணவேண்டும். எமக்கு சாதகமாக ஜனாதிபதி தீர்வு கண்டால், முஸ்லிம் காங்கிரஸையும் அங்கமாகக் கொண்ட தேசிய ஐக்கிய முன்னணி வடக்கு கிழக்கில் சில மாவட்டங்களில் தனித்தும் ஏனைய இடங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்தும் தேர்தலில் குதிப்போம்.

ஜனாதிபதி தீர்க்கமான முடிவைத் தராவிட்டால் 22 மாவட்டங்களிலும் நாம் தனித்துப் போட்டியிடுவோம். ஜனாதிபதியால் தனித்து சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது. தமிழர்கள், சிங்களவர், முஸ்லிம்கள் இணைந்தே தீர்வையும், சமாதானத்தையும் ஏற்படுத்த முடியும். தமிழர்களைப் பொறுத்தவரை சில சமயம் அதற்கான தலைவராக பிரபாகரன் வரக்கூடும். ஆனால் பிரபாகரனும் ஜனாதிபதியும் மட்டும் சேர்ந்து கொண்டு அமைதியைக் கண்டுவிட முடியாது. அதற்கு முஸ்லிம்களின் ஒத்துழைப்பும் அவசியம். அந்த ஒத்துழைப்பை முஸ்லிம் காங்கிரஸ் மூலமே எட்ட முடியும் என்பதை சம்பந்தப்பட்டோர் மறந்து விடக்கூடாது.

சமாதானத்தை எட்டுவதற்கு - பௌசி அல்ல - முஸ்லிம் காங்கிரஸே தேவை என்பதை சகலரும் உணரவேண்டும்.

இவ்வளவு காலமும் சமாதானத்தை எட்டுவதற்கு ஜனாதிபதி எடுத்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கியது முஸ்லிம் காங்கிரஸே. ஜனாதிபதி இன்று பதவியில் நீடிப்பதற்கு நாமே காரணம் என்பதையும் சம்பந்தப்பட்டோர் மறந்துவிடக் கூடாது.

- இவ்வாறு அஷ்ரப் மேலும் தெரிவித்தார். (உ)

## ஐ.தே.க.ஆட்சிக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் அடிப்படையில் விடுதலைப்புலிகளுடன் நேரடியாக - நிபந்தனை ஏதுமின்றி - பேச்சு நடத்தவேண்டும் என்ற ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு இந்த விஞ்ஞாபனத்தில் மீண்டும் வலியுறுத்தப்படும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விஞ்ஞாபனத்தில் இடம்பெறும் முக்கிய அம்சங்கள் பற்றிய தகவலை ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் வெளியிட்டார். அவர் தெரிவித்ததாவது -

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல், பிரதமர் தலைமையிலான நாடாளுமன்ற முறையை நடைமுறைப்படுத்தல், நாடாளுமன்ற ஆயுளை ஐந்து ஆண்டாகக் குறைத்தல் ஆகிய அம்சங்கள் உட்பட பல அம்சங்கள் இதில் இடம்பெற உள்ளன.

தற்சமயம் நடைமுறையில் உள்ள அரசமைப்பு விதிகளுக்கு அமைய புதிய அரசமைப்பு மாற்றி அமைக்கப்படும். தேர்தல்முறையில் மாற்றம் கொண்டுவரப்படும். தொடர்புச்சாதனத்துறையை நவீனப்படுத்த விசேட சட்டங்கள் கொண்டு வரப்படும் என்றார். (உ-க-3-8-10)

## தமிழ் கட்சிகளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக் குழுக்களை ஒரே அணியில் போட்டியிட வைப்பதன் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தைக் கட்டிக்காக்க முடியும் என்று தமிழர் விழிப்புணர்வு ஒன்றியம் கருதுகிறது.

தமிழ்க்கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களை ஒரே அணியில் போட்டியிட வைக்கும் முயற்சியாக நேற்றுத் திருகோணமலையில் தமிழர் விழிப்புணர்வு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழ்க்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி கலந்துகொள்ளவில்லை. இணக்கம் எதுவும் ஏற்படாத நிலையில் கூட்டம் முடிவடைந்தது.

இதனை அடுத்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. (இ-8)

## தமிழ் கட்சிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்

ஒன்றை நடத்தினார்கள்.

ஜனநாயக வழிக்குத் திரு[ம்பி]யுள்ள தமிழ்க் கட்சிகளுக்கு பா[து]காப்பு வழங்கவேண்டியது அரசா[ங்]கத்தின் கடமையாகும் என்று இ[ந்]தக் கலந்துரையாடலின்போது சு[ட்]டிக் காட்டிய தமிழர் விடுதலை[க்] கூட்டணித்தலைவர்கள், யா[ழ்] மாவட்டத்தில் தேர்தல் காலத்தி[ல்] ஜனநாயக வழிக்குத் திரும்பியு[ள்ள]வர்கள் ஆயுதங்களுடன் நடமாடு[வ]தால் பொதுமக்கள் பெரும் சிரம[ங்]களை எதிர்நோக்க வேண்டிவரு[ம்] என்று தெரிவித்தனர்.

வெளிமாவட்டங்களுக்கு பயண[ம்] மேற்கொள்ளும் கப்பல் பயணிகள் எதிர்நோக்கும் கஷ்டங்கள், சிரம[ங்]கள் குறித்தும் அவர்கள் எடுத்[து]ரைத்தனர். (இ-5-17)

## சுரேஷ் குழுவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல் சின்னத்தை யாருக்கு ஒது[க்]குவது என்ற சர்ச்சை தொடர்பா[க] சுரேஷ் பிரேமச்சந்திரன் தரப்பிலு[ம்] வரதராஜப்பெருமாள் தரப்பிலு[ம்] வாதங்களை நேற்று தேர்த[ல்] ஆணையாளர் தனித்தனியாக செ[வி]மடுத்தார். அவர் தமது முடி[வை] பெரும்பாலும் இன்று அறிவிப்[பா]ர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் ஈ.பி.ஆர்.எ[ல்.]எவ்வின் இரு பிரிவினருமே க[ட்]சியின் பெயரையோ, சின்னத்தை[யோ] பயன்படுத்த முடியாதவாறு நீதி[மன்]றம் இடைக்காலத் தடை உ[த்த]ரவு ஒன்றை விடுத்துள்ளபோதி[லும்] அது சம்பந்தமான வழக்குக[ள்] தேர்தல் ஆணையாளர் பிரதிவ[ாதி]யாக குறிப்பிடப்படாததால் அ[வர்] இது சம்பந்தமான சுயேச்சைய[ான] முடிவு ஒன்றை எடுப்பதை நீதிம[ன்ற] உத்தரவு கட்டுப்படுத்தாது என[] விடயமறிந்த வட்டாரங்கள் சுட்[டிக்] காட்டுகின்றன. எனவே இந்[தத்] தேர்தலில் இக்கட்சியின் ஏதோ [ஒரு] அணிக்கு கட்சிப்பெயரையும் ச[ின்]னத்தையும் பயன்படுத்தக்கூ[டிய] அனுமதியைக்கூட தேர்தல் ஆண[ை]யாளர் வழங்கினால் ஆச்சரியப்[படு]வதற்கில்லை என்று அந்த வட்[டா]ரங்கள் தெரிவித்தன. (...)


இணுவில்
பொருளியற் கல்லூரி
K.K.S. வீதி - இணுவில்

**A/L 2002**
**பொருளியல்**
S.வரதராஜன்

**தேசியவருமானம்**
ஆரம்பம் :- 04.09.2000
திங்கள் 3.30 p.m.
(ப.நேரம்)
(77726)



உரும்பிராய் வடக்கு
கணேசா சனசமூக நிலைய
கட்டட வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும்

**மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி**

காலம் : 03-09-2000 ஞாயிற்றுக்கிழமை
இடம் : கந்தரோடை கோயில்குள மைதானம்
நேரம் : நண்பகல் 12.00 மணி

போட்டிகள் யாவும் A, B, C என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.
*பிரவேசம் ரூபா 10 மட்டுமே!*
**கணேசா சனசமூக நிலையத்தினர்.**
(77807)


## மரண அறிவித்தல்

### திருமதி நாகலிங்கம் சிதம்பரம்

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் பொற்பதி வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் சிதம்பரம் நேற்று (30-08-200) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமு நாகலிங்கம் அவர்களின் மனைவியும், திருமதி தெய்வானை நடராசா (கனடா), காலஞ்சென்ற இராசம்மா, அண்ணாமலை, சண்முகம் (முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபன சிறாப்பர்), இராசதுரை (படவரைஞர் R.D.D., வவுனியா), செல்வரட்ணம் (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் தாயாரும், இந்துமதி, விஜயலக்ஷ்மி, புனிதவதி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 124, பொற்பதி வீதி, கொக்குவிலில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 2.மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
நா.சண்முகம்.
(மகன்)

*124, பொற்பதி வீதி,*
*கொக்குவில்.* (C/12768)


கூட்டுறவாளர்களே! தொழிலாளர்களே!
அன்றாட அவலம் நீங்கி,
உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெற்று,
சரிநிகர் சமானமாக வாழ (ஈ.பி.டி.பி.)
அளித்திடுங்கள் உங்கள் வாக்குகளை
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு!

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



X

சாவகச்சேரி வர்த்தகர்களது கோரிக்கையை ஏற்று அவர்களது 'உ' டாங்கீட்டு அட்டைகளுக்கு உலர் உணவு வழங்க ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தார்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31-08-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.